# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 26 வியாழக்கிழமை (10-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:188


# நாடாளுமன்றம் எந்நேரத்திலும் கலைக்கப்படலாம்!

## அநேகமாக இன்று அல்லது நாளை

கொழும்பு,ஓகஸ்ட் 10

**அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சி தோல்வியடைந்ததை அடுத்து - தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் எதிர்வரும் 24 ஆம் திகதி நள்ளிரவு காலாவதியாவதற்கு முன்னரே - அதைக் கலைத்துவிடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.**

**நாடாளுமன்றம் எந்த நேரத்திலும் - அநேகமாக இன்று அல்லது நாளை - கலைக்கப்படலாம் என்று கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

நாடாளுமன்றத்தில் அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட மூலம் மீதான வாக்கெடுப்பை கால வரையறையின்றி ஒத்திவைக்கும் முடிவை எடுத்த பின்னர், நேற்று முன்தினம் இரவு தனது சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரை அழைத்து அரசியல் நிலைமைகள் குறித்து ஜனாதிபதி விரிவாக ஆராய்ந்ததாகவும் -

அதையடுத்தே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முடிவு உயர்மட்டத்தில் எடுக்கப்பட்டதாகவும் - கூறப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து நேற்றுப் பகல் தேர்தல் ஆணையாளர் தயானந்த தஸநாயக்காவை அழைத்து தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஜனாதிபதி ஆலோசனை நடத்தினார்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், அரசாங்க சேவை போன்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

# சிறிமா பதவி விலகுகின்றார்? அவரின் இடத்துக்கு ரட்ணசிறி



கொழும்பு,ஓக10

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தாயாருமான சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்வார் என்றும் -

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் சபை முதல்வராகவும் பதவி வகிக்கும் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா புதிய பிரதமராக இன்று பதவி ஏற்பார் என்றும் நேற்று நள்ளிரவு கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பான செய்திகள் அடிபட்டன.



வயோதிபம் காரணமாக சுறுசுறுப்பாகச் செயற்பட முடியாமல் இருக்கும் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியலிலிருந்து முற்றாக ஓய்வு பெற விரும்புவதாகத் தெரிகின்றது.

அவரது இடத்துக்குச் சுறுசுறுப்பாகச் செயற்படக்கூடிய ஒருவரை அப்பதவிக்கு நியமித்தால் அவர் பிரதமருக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஹெலிக்கொப்டர் போக்குவரத்து உட்பட ஏனைய பிரயாண வசதிகளுடன் தேர்தல் பிரசாரத்தில் முழு மூச்சாக ஈடுபட முடியும் என்றும் ஜனாதிபதியும் அரசின் ஏனைய மூத்ததலைவர்களும் கருதுவதாகவும் -

அதன் காரணமாகவே அமைச்சரவையில் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அப்பதவிக்கு நியமிக்கப்படுவதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஷெல்லைக் குற்றிய சிறுவன் உடல் சிதறி மரணம்!

வவுனியா,ஓக.10

அநாதரவாகக் கிடந்த வெடிக்காத ஷெல் ஒன்றை எடுத்து நிலத்தில் குத்திய சிறுவன் அது வெடித்ததில் உடல் சிதறிப் பலியானான்.

நேற்றுக் காலை 8 மணியளவில் முல்லைத்தீவு பள்ளப்பாடு வண்ணான் குளம் பகுதியில் இந்தப் பரிதாபகரச் சம்பவம் இடம்பெற்றது.

எட்டு வயதான தர்மராசா சயந்தன் என்ற சிறுவனே ஷெல்லை எடுத்து நிலத்தில் குத்தியுள்ளான். இதனால் அச்சிறுவன் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியானான்.

1996 வரை முல்லைத்தீவு நகரம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் படையினர் நிலை கொண்டிருந்தனர். (ஐ-4)

## முல்லைத்தீவில் விமானத்தாக்குதல்

கொழும்பு,ஓக.10

இலங்கை விமானப்படைக்கு புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட நவீன 'மிக்'போர் விமானங்கள், முல்லைத்தீவில் சாலைப்பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் தளத்தைத் தாக்கி அழித்து விட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

கடற்புலிகளின் பெண் போராளிகள் பயிற்சி நிலையமும், ஆயுதக் களஞ்சியசாலை,எரிபொருள் பிரிவு என்பனவும் இத்தாக்குதலில் நிர்மூல

(12ஆம் பக்கம் பார்க்க)

## எந்த வேளையிலும், தேர்தலை சந்திக்க ஐ.தே.க. தயார்!

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

அரசு,நாடாளுமன்றத்தை உடனடியாக கலைத்து அடுத்த நிமிடமே தேர்தலை நடத்தினாலும் அதை எதிர்கொள்ள ஐ.தே.கட்சி தயார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பலலட்சம் ரூபா பணம்கொடுத்து ஐ.தே.கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்க அரசு முயன்றது ஆனால் உத்தேச அரசமைப்பைச் சட்டமாக்க 150 வாக்குகளைத் திரட்ட முடியாமற் போனமை அரசுக்குப் பெரும் பின்னடைவாகும். எனினும் உத்தேச அரசமைப்புத் தொடர்பாக அரச தரப்புடன் பேச்சுக்களைத் தொடர்ந்து மேற்கொள்ள நாங்கள் தயார்.

ஒழுங்கான அரசமைப்பு ஒன்று தயாரிக்கப்படுமானால் மகாசங்கத்தினர் அடங்கலாக அனைவரும் அதனை ஆதரிப்பர். தற்போதைய நிலையில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள அரசு விரைவில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் என நம்புகிறோம் - என்று ரணில் அங்கு தெரிவித்தார். (ஐ-6)

## கடற்படை வாகன அணி மீது நேற்று திருமலையில் கிளைமோர் தாக்குதல்!

### குழந்தை, சிப்பாய் பலி! குடும்பத்தவர் உட்பட 30 பேர் காயம்!!

திருகோணமலை,ஓக.10

திருகோணமலை அன்புவழிபுரம் பகுதியில் கடற்படையினரையும் அவர்களது உறவினர்களையும் ஏற்றிச் சென்ற வாகன அணி மீது நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் கடற்படை அதிகாரி ஒருவரின் ஒரு வயதுக் குழந்தையும் மற்றொரு கடற்படைச் சிப்பாயும் உயிழந்தனர். கடற்படைச் சிப்பாய்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் உட்பட சுமார் முப்பது பேர் காயமடைந்தனர். திருமலை நகரிலிருந்து சுமார் நான்கு மைல் தொலைவில் - அநுராதபுரம் சந்திக்கு அண்மையில் - வாகன அணி சென்று கொண்டிருந்த சமயம் இத்தாக்குதல் நடைபெற்றது.

விடுமுறையில் செல்லும் கடற்படையினரையும் அவர்களின் உறவினர்களையும் ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றே அப்பகுதியில் வீதியருகே மரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்ததாகக் கருதப்படும் கிளைமோர் கண்ணியில் சிக்கியது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 20 பேர் கடற்படையினர்; ஏனையோர் பொதுமக்கள். அவர்களில் பெரும்பாலானோர் கடற்படையினரின் உறவினர்கள் எனத் தெரிவிக்கப்படுன்றது.

காயமடைந்தோர் உடனடியாகத் திருகோணமலைக் கடற்படை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்; படுகாயங்களுக்கு உள்ளானோர் பின்னர் விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து அன்புவழிபுரம் பகுதியில் பலத்த தேடுதல் நடத்தப்பட்டது; ஆனால் எவரும் கைதுசெய்யப்பட்டதாகத் தகவல் இல்லை. (உ-க-7)

### 'சிற்றி ஒவ் றிங்கோ'

## கப்பல் சேவையை வாராந்தம் மூன்றாக அதிகரிக்க முயற்சி

யாழ்ப்பாணம்,ஓக.10

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் பருத்தித்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையில் தற்போது வாராந்தம் இரு தடவைகள் நடைபெறும் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவையை, வாரத்துக்கு மூன்றாக அதிகரிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டிச் சூட்டுச் சம்பவத்தில் இரு குடும்பஸ்தர்கள் மரணம்!

மட்டக்களப்பு,ஓக.10

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டிச் சந்தியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வீதி ரோந்துப்பணியில் ஈடுபட்ட படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய்கள் இருவர் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவத்தை அடுத்து இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் சிக்கி பொதுமக்களில் இருவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தம் மேலும் தீவிரமாக்கப்படும்!

## நாடாளுமன்றில் அனுருத்த அறிவிப்பு

கொழும்பு,ஓக10

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும். அதேவேளை விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முன்னர் எப்போதும் இல்லாத வகையில் தீவிரப்படுத்தப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த.

நாடாளுமன்றத்தில் நேற்று அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ரத்வத்த இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இராணுவ மற்றும் பொலிஸ் முகாம்கள், காவலரண்கள் மீது தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதல் சம்பவங்கள் வடக்கு - கிழக்குப் பகுதிஎன்று இல்லாமல் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் எவ்வாறு பலப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படும் என்பதை நாட்டு மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் எமது செயற்பாடுகள் அமையும் - என்றும் அமைச்சர் ரத்வத்த மேலும் சொன்னார். (ஐ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

*வந்து விட்டன!*

## தவம் போட்டோ அன் வீடியோ

தென்மராட்சியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்
யாவும் பெற்றுக்கொள்ளலாம்

*தொடர்புகள் :-*
**மக்ஷல் ஹவுஸ்**
சீமாட்டி அருகில்
யுபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.

*தற்காலிக முகவரி:-*
**தவம் போட்டோ**
172, கிராம அலுவலகம் அருகில்,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

(77168)


## பாராட்டுகளும் வாழ்த்துகளும்

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின்
தலைவராக இருந்தவரும், ஈழமக்கள் ஜனநாயகக்
கட்சியின் யாழ். மாவட்டப் பிரதிப் பொறுப்பாளருமாகிய
தீவகம் தந்த மைந்தன்

### கௌரவ நடராசா மதனராஜா

அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதையிட்டு எங்கள் இதயபூர்வமான பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த உயர் பதவியை எமது சபையின் தலைவருக்கு வழங்கியமைக்காக

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும்
நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

கௌரவ
### கே.என். டக்ளஸ் தேவானந்தா

*அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.*

உப தலைவர், உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள்,
ஊர்காவற்றுறைப் பிரதேச சபை.

(77170)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் 315, பாங்சால் வீதியைச் சேர்ந்தவரும் மனித
முன்னேற்ற நிலையத்தின் சிரேஷ்ட ஊழியரும் முன்னாள்
யாழ்.ஐக்கிய வியாபாரச் சங்க உதவி முகாமையாளரும்
காலஞ்சென்ற சமாதான நீதிவான்

### திரு. யோ.ஞானப்பிரகாசம்

அவர்களின் மகனுமாகிய

### திரு. ஞா.அருளானந்தம்

அவர்கள் 25-07-2000 முதல் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை அறிந்து மன மகிழ்ச்சியுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இயக்குநரும், சக ஊழியர்களும்,
யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலையம்,
(கியூடெக்)
*மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.*

(77163)

## கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும்

08-08-2000 அன்று பருத்தித்துறை வந்தடைந்த கப்பலில் செல்வி நொறிஸ் என்பவரது புத்தகங்கள் அடங்கிய கறுப்பு நிற Bag பஸ் ஏறிய இடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.44, கோணாமலை வீதி, கொக்குவில் கிழக்கு (T.P. 3442) என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

*-- செல்வி நொறிஸ்*

(77176)

## பிரார்த்தனை அஞ்சலி

வைதிக நெறி நின்று செந்தண்மை பூண்டு உலகோர் போற்ற பல காலம் வாழ்ந்து கௌரவித்து முன்னேச்சரம் சதசண்டி ஹோமங்களில் பங்களிக்க வைத்தும், எமது ஆலயத்தில் மஹா கணபதி ஹோமங்கள் நடத்தி வைத்தும், தமது கைலாசநாதர் சிவன்கோயில் கும்பாபிஷேகத்தில் பங்கு பெற வாய்ப்புத் தந்தும், எமது பிள்ளையார் கோயில் மஹா கும்பாபிஷேகத்தில் சர்வபோதகமாக இருந்து நடத்தி வைத்து, ஆலயக் கிரியைகளில் ஏற்படும் சந்தேக விபரீதங்களைத் தெளிவுபடுத்தியும் மற்றும் எமது வீட்டு வைபவங்களிலும் சமுகம் தந்து சிறப்பித்தும் எமது அளவிலா அன்புக்குப் பாத்திரமாகிய

அமரர் பேராசிரியர் கலாநிதி

### பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள்

அவர்களின் திடீர் மறைவு எமக்கும் எமது சமூகத்துக்கும் ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா ஸ்ரீ காமாட்சியம்பிகையின் பாதமடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரம்மஸ்ரீ ஆ.சந்திரசேகரக்குருக்கள் குடும்பம்**
*வாய்க்கால் தரவைப் பிள்ளையார் தேவஸ்தானம்
நீர்வேலி.*

(77172)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.10

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் விவரங்கள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வலயங்களிலும் தற்போது கடமையாற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் பெயர், கற்பிக்கும் பாடசாலை, வதிவிட முகவரி, நியமனத் திகதி, கல்வித் தகைமை ஆகிய விடயங்கள் உள்ளடங்கலாக ஆசிரியர்களின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு பதில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார். (க)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.10

நாவலர் பாலர்சோலை சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டப மைதானத்தில் ஆசிரியை செல்வி பாலசுப்பிரமணியம் ஜெயந்தி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை உப அதிபர் சு.தியாகலிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ்.மின் அத்தியட்சகர் எஸ்.ரி. கணநாதனும் கௌரவ விருந்தினராக பாலர் கல்விக் கழகத் தலைவர் இ.தவகோபாலும் கலந்து கொள்வர். (க)

## பட்டப்பின் கல்வி கற்கை நெறி எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.10

யாழ். பல்கலைக்கழகத்தில் ஈராண்டுப் பகுதி நேரப் பட்டப் பின் கல்வித் தகைமைக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளுக் கான எழுத்துப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை முற்பகல் 9 மணிக்கு பல்கலைக் கழகத்தில் நடைபெறும்.

பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க)


**NEW SCIENCE COLLEGE**
**JAFFNA**

**பௌதிகவியல்**

வகுப்புகள்
நடைபெறுகின்றன.

2002 Friday 10.00-11.00
2001 Friday 8.00-9.00
**(Heat)**
**திரு.கருணாநிதி**
B.Sc. (Spe.)

(77152)

**ராஜா**
**(யாழ்ப்பாணம்)**
**இன்று மட்டும்!**
**எம்.ஜி.ஆர்.,**
**ஜெயலலிதா**
மற்றும் பலர் நடிப்பில்.
**குடியிருந்த கோயில்**
காட்சிகள்:
10.30, 2.00 (புதிய நேரம்)
ரசிகர்களே! நாளை முதல்
**சுபாஸ்**

(C/12325)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
17-08-2000 வரை
**ரஜனி, சௌந்தர்யா,**
நடிப்பில
**படையப்பா**
(ரீல்ஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (புதிய நேரம்)

(77139)

## அறிவித்தல்

சகல படச்சுருள்களும் பிரதியாக்கம் செய்து
வந்துவிட்டன.

*மீண்டும் விரைவான சேவையில் ......*

**மக்சல் ஹவுஸ்**
*20, யுபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.*

(77166)


# மரண அறிவித்தல்கள்

## குமாரசாமி அருணாசலம்

இத்தியடிப் பிள்ளையார் வீதி, சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் தற்போது சந்தைவீதி, உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி அருணாசலம் நேற்று முன்தினம் (08-08-2000) செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் குமாரசாமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சண்முகம், வள்ளிநாயகி தர்மலிங்கம், அமரர் மாணிக்கராசா, கிருஷ்ணசாமி, சிவபாக்கியம், சின்னராசா, அமரர் பத்மநாதன்(சோதி) ஆகியோரின் சகோதரனும், நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், இந்திரா, ஈஸ்வரி, விக்னேஸ்வரன், பரமேஸ்வரி, மகேஸ்வரன், ஜெகநாதன், தனலக்சுமி, உதயன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் தேவறஞ்சன் (றஞ்சன்), தவேந்திரன் (சோக்கன்), வரதராஜன் (குட்டி), சாரதாதேவி, சுதர்சன், சுபத்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், வதனி, கமலேஸ்வரி, ஜெயந்தி, பாஸ்கரன், சுகந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2000) வியாழக்கிழமை நடைபெற்று மதியம் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சந்தை வீதி உடுப்பிட்டியிலிருந்து வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*சந்தைவீதி
உடுப்பிட்டி.*

தகவல்:-
மகன் அ.தவேந்திரன் (சோக்கன்)
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

(77145)

## அருளப்பு மரியாம்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

இல.52, மருதடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட அருளப்பு மரியாம்பிள்ளை நேற்று (09.08.2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிசிலியா(றோசம்மா)வின் அன்புக்கணவரும், றெஜீனா, இராசேந்திரம், அருட்சகோதரி யசிந்தா(தி.சி.க), தேவராசா, புவிராசா, ஜெயராசா, அருட் திரு.யோகராசா(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தனசிங்கம், திருமதிகள் ஞானரட்ணம், யோகினி, இமெல்டா, மேபிள் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.08.2000) வியாழக்கிழமை பி.ப 3.30(புதியநேரம்) மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின், நல்லடக்கத்துக்காக புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*859/24,ஆஸ்பத்திரி வீதி,
(யுவானியார் ஆலய முன்ஒழுங்கை),
யாழ்ப்பாணம்.*

தகவல்:
திரு. தனசிங்கம்
(மருமகன்)

(77171)

## பாஷையூர் ஞானப்பிரகாசம் சூசைப்பிள்ளை (சிங்கம்)

பாஷையூர் ஞானப்பிரகாசம் சூசைப்பிள்ளை(சிங்கம்) அவர்கள் கடந்த (05.08.2000) சனிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னார் செபமாலை மரியையின் அன்புக் கணவரும், உதயகுமாரன், இதயகுமாரன்(டியூக்), இதயகீதா(முன்னாள் ஆசிரியை கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (11.08.2000) வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் நடைபெறும்.

*தற்காலிக முகவரி
அராலி வடக்கு.*

தகவல்:
செ. பாலேந்திரன்

(77167)

## சின்னத்தம்பி சிற்றம்பலம்

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிற்றம்பலம் நேற்று (09.08.2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும்,நாகலெட்சுமியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரது தகனக்கிரியைகள் இன்று (10-08-2000) வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*103,காரைநகர் வீதி,
வில்லூன்றி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.*

தகவல்:-
க.சாம்பசிவம் (சோதிடர்)
இ.கணேசலிங்கம்
கா.சந்திரகுமார்
(மருமக்கள்)

(77177)

## செல்லையா இராசதுரை

(இளைப்பாறிய ரயில் நிலைய அதிபர் அநுராதபுரம்)

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா ரொறன்ரோவில் வசித்தவருமாகிய செல்லையா இராசதுரை அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் இராஜேந்திரன்(லண்டன்), ஜெயேந்திரன் (கனடா), குணேந்திரன்(கனடா), கரந்தினி(கனடா), நிலானி(கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசபிள்ளை(கனடா), அனுபாஜன்(கனடா), கல்பனா(கனடா), பஜி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2000) கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொற்பதி வீதி,
கொக்குவில்.*

தகவல்:
சிவசம்பு பாலசுந்தரம்
சிவசம்பு ஞானசுந்தரம்
(மைத்துனர்கள்)

(77178)



பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் சக்தியாக விளங்கும் ராஜமாதா தனது நூறாவது பிறந்த நாளை கடந்த 4ஆம் திகதி கொண்டா டினார்.

மறைந்த 6ஆவது ஜோஜ் மன்னரின் பாரியாரான இவர் பிரிட் டிஷ் மகாராணி இரண்டாம் எலிச பெத்தின் தாயார் ஆவார்.

பிரிட்டிஷ் கடற்படை மற்றும் விமானப் படையின் பெண்கள் பிரி வுகளுக்குக் கௌரவத்தளபதி யாக உள்ள இவர் கடந்த நூறு ஆண்டுகளில உலகில் இடம்பெற்ற மாற்றங்களுக்குச் சாட்சியாகவும் விளங்குகிறார்.

100ஆவது பிறந்த நாளை ஒட்டி தனக்கு அளிக்கப் பட்ட விருந்துபசாரம் ஒன்றில் கலந்து கொண்ட ராஜமாதா இராணுவக் குதிரை ஒன்றை தடவிக் கொடுக்கும் காட்சி இது.

# பெண்சிசுக் கொலையைத் தடுக்க தமிழகத்தில் பல லட்சம் ரூபா திட்டம்

சென்னை,ஓக.10

தமிழ்நாட்டில் பிறந்த உடன் கொல்லும் கொடூர செயலைத் தடுக்கம் திட்டத்துக்கு மாநில அரசு டில லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி.சற்குணம் பாண்டியன் தெரிவித்தார்.

பெண்சிசுக் கொலை தொடர்பாக சமூக நல அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் இதனைக் கூறினார். பெண்குழந்தைகளைத்தத்து எடுத்து வளர்க்க விரும்புவர்களுக்கு உதவி செய்ய 17 தொண்டு அமைப்புகளுக்கு அரசு அனுமதி அளித்திருப்பதாகவும் -

இதனால் தத்தெடுக்கப்படும் பெண்குழந்தைகளின் பிற்கால வாழ்கைப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் மதுரை சேலம், தர்மபுரி போன்ற கல்வி அறிவு குறைந்த மாவட்டங்களில் பெண்குழந்தைகள் பிறந்தால் அவர்களை கன்னிப்பால் ஊட்டியோ, நெல்மணிகளைத் தொண்டைக்குள் திணித்தோ பெற்ற தாய்மாரே அகொன்று விடும் கொடூரம் நீண்டகாலமாக நடந்து வருகிறது என்றும் -

ஏழைக்குடும்பங்களில் பெண்களுக்கு வரதட்சணை வழங்க முடியாத நிலையும், பெண்ணால் அதிகம் சம்பாதிக்கவோ, உயர்ந்த நிலைக்கு முன்னேறவோ முடியாது என்ற மூடநம்பிக்கையுமே இத்தகைய நிலை தொடரக் காரணம் என்றும் -

கரத்தரங்கில் பேசிய பலரும் சுட்டிக் காட்டினார்கள். (ஒ)

# 'தக்கரேயை விடுதலை செய்தது தவறு' மும்பை உயர் நீதிமன்றம் தெரிவிப்பு

## மாநில அரசின் மேன்முறையீடு ஏற்பு



மும்பை,ஓக.10

சிவசேனைத்தலைவர் பால் தக்கரேயை மும்பை நீதிமன்றம் விடுதலை செய் தது தவறு என்று உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

மும்பையில் 7 ஆண்டுக ளின் முன்னர் இடம்பெற்ற மதக்கலவரங்களுக்கு கார ணமாக இருந்தாக குற்றஞ்சாட்டி பால் தக்கரே மீது மகாராஷ்டிரா அரசு தொடர்ந்த வழக்கில் கடந்தமாதம் 25 ஆம் திகதி காலங்கடந்துவிட்டதாகக் கூறி தக்க ரேயை மாவட்ட நீதிமன்றம் விடுதலை செய்திருந்தது.

இதனை எதிர்த்து மகாராஷ்டிரா அரசு தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட மும்பை உயர்நீதி மன்றம் தக்கரேயை விடுதலை செய் தது தவறு என்றும்,

மகாராஷ்டிரா அரசின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் கூறியுள்ளது.

அதே சமயம் பால் தக்கரேக்கு விடுதலை அளித்த தீர்ப்புக்கு இடைக்கால தடை வழங்க உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

தக்கரே மீதான வழக்கை விசாரணைக்கு உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொண்டதை அடுத்து மீண்டும் மும்பையில் பதற்றம் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. (ஒ)

# ராமர் கோவில் கட்டும் திட்டம்: பாரதீய ஜனதா ஒத்திவைத்தது!

புதுடில்லி,ஓக.10

தேசிய ஜனநாயகக் கூட்டணிக் குத் தலைமை வகிக்கும்வரை பார தீய ஜனதாக் கட்சி அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோவில் கட்டுவது உட்பட சர்ச்சைக்குரிய விடயங்களை எழுப் பாது என்று அக்கட்சியின் புதிய தலைவர் பங்காரு லஷ்மன் உறுதி தெரிவித்தார்.

புதுடில்லியில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைக் கூறினார். அப் பேட்டியில் பங்காருலஷ்மன் மேலும் கூறியதா வது:-

## உலக அரங்கில்

கடந்த தேர்தலின்போது தேசிய ஜனநாயகக் கூட்டணி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் கூறப்பட் டவை மட்டுமே அரசின் செயல் திட் டங்களாகக் கொள்ளப்படும் என்றும -

பலத்த எதிர்ப்புகள் தோன்றி யுள்ள போதும் பொருளாதாரச் சீர்தி ருத்த நடவடிக்கைகளை வாஜ்பாய் அரசு முன்னெடுத்துச் செல்லும் என் றும் உறுதிபடக் கூறினார். (ஒ)

# பாகிஸ்தானை பேச்சில் சேர்க்க இந்தியா மறுத்ததால் ஒரு தரப்பான தாக்குதல் நிறுத்தத்தை முஜாஹிதீன்கள் விலக்கிக் கொண்டனர்

# காஷ்மீரில் அமைதி முயற்சி மீண்டும் தடைப்பட்டது

காஷ்மீர்,ஓகஸ்ட்.10

**காஷ்மீரில் ஹிஸ்புல் முஜாஹிதீன்கள் நேற்று முன்தினத்துடன் தமது ஒரு தரப்பான தாக்குதல் நிறுத்தத்தை விலக்கிக் கொள்வதாக அறிவித் துள்ளனர். முஜாஹிதீன்கள் மீது தமது தாக்குதல் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது. காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சி இதனால் மீண்டும் தடைப்பட்டது.**

கடந்த மாதம் 23 ஆம் திகதி ஹிஸ்புல் முஜாஹிதீன்கள் தமது தாக்குதல்களை நிறுத்திக் கொள்வ தாக அறிவித்திருந்தனர்.

இந்திய ராணுவமும் முஜாஹி தீன்களை தேடி அழிக்கும் நடவடிக் கையை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

இதனைஅடுத்து இந்திய அரசுக் கும முஜாஹிதீன்களுக்கும இடையே பேச்சுவார்த்தை நடத்துவதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டு ஆரம்ப ஆலோசனைகளும் இடம்பெற்றன.

இந்தச்சமயத்தில் பாகிஸ்தானை யும் பேச்சுக்களில் சேர்க்க வேண்டும் என்று முஜாஹிதீன்கள் கோரிக்கை விடுத்ததை இந்திய அரசு முற்றாக நிராகரித்தது.

பாகிஸ்தான் பேச்சில் கலந்து கொள்ளச் சம்மதிக்க இந்தியாவுக்கு நேற்று முன்தினம் வரை காலக்கெடு விதித்திருந்த முஜாஹிதீன்கள இறுதி வரை இந்தியா தனது முடிவை மாற் றிக் கொள்ளாததால் தாக்குதல் நிறுத்தத்தை விலக்கிக் கொண்டுள் ளனர்.

இதற்கான அறிவிப்பை முஜாஹி தீன்களின் தலைவர் சையத் சலாவு தின் அறிவித்தார்.

இது குறித்து இந்தியத்தரப்பினர் கருத்துக் கூறுகையில் நடைபெற விருந்த பேச்சுவார்த்தை எல்லைப் பிரச்சினை தொடர்பானது அல்ல. அதனால் பாகிஸ்தானை ஏன் பேச் சில் சேர்க்க வேண்டுமஎன்று கேள்வி எழுப்பியுள்ளனர். (ஒ)

# கிளர்ச்சியாளர்கள் சுட்டதில் பிஜியில் 2இராணுவத்தினர் பலி!

சுவா,ஓக.9

பிஜியில் கிளர்ச்சியாளர்கள் இரண்டு இராணுவ வீரர்களைச் சுட் டுக் கொன்றதாகக் கூறப்படுகிறது.

தலைநகர் சுவாவிற்கு அருகே கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ்ஸ்பைட் டின் சொந்த மாநிலத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

கிளர்ச்சியாளர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட் டுள்ள பிஜி இராணுவத்தினர் கிளர்ச் சியாளர்களின் முகாம் ஒன்றை முற்றுகையிட்டு அங்கிருந்தவர்க ளைக் கைது செய்ய முயற்சி செய்த போது இருதரப்பினருக்கும் மோதல் ஏற்பட்டதாகவும் -

அந்த மோதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக வும் -

தகவல்கள் தெரிவித்தன. (ஒ)

# பிரபஞ்சத்தின் வயது 1400 கோடி ஆண்டுகள்

## பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

லண்டன்,ஓக.10

பிரபஞ்சத்தின் வயது ஆயிரத்துநானூறு கோடி ஆண்டுகள் என்று பிரிட்டிஷ் வானியல் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்ட ஆய்வறிக்கை யில் அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய விஞ்ஞானிகள் அறிமுகப்படுத்திய 5பரிசோதனை முறைகளின் மூலம் பிரபஞ்சத்தின் வயது கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரி வித்துள்ளார்.

பிரபஞ்சம் தோன்றக் காரணமாக இருந்ததாகக் கரு தப் படும் முதல்வெடிப்பு, 1400 கோடி ஆண்டுகளின் முன்னர் நிகழ்திருக்கலாம் என்று அவர்கள் கூறியுள் ளனர்.

இந்த முதல் வெடிப்பில் மிகப்பெரிய கோள் ஒன்று வெடித்துச் சிதறியதாகவும் சிதறிய ஒவ்வொரு துண்டும் மேலும் உடைந்து உடைந்து இன்றைய பிரபஞ்சம் உருவானதாகவும் கருதப்படுகிறது. தற்போதும் உடை வுகள் ஏற்பட்டு புதிய சூரியன்களும், கிரகங்களும் பிர பஞ்சத்தின் ஏதாவது ஒரு பகுதியில் தோன்றிக்கொண்டி ருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அறிவியல் முன்னேறி வரவிருக்கில் புதிய கண்டு பிடிப்புகள் நிகழ்கின்றபோதும் முதல் வெடிப்புக்குறித்து தீர்க்கமான, இறுதியான முடிவுஇதுவரை கண்டுபிடிக் கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ரஷ்யாவில் பயங்கர குண்டுவெடிப்பு; 8 பேர் பலி; 50 பொதுமக்கள் காயம்

மொஸ்கோ,ஓக.10

ரஷ்யாவில் கிரெம்ளின் அருகே உள்ள சுரங்கப்பாதை ஒன்றில் பயங்கரக் குண்டு வெடித்ததில் 8 பேர் கொல்லப்பட்டனர்; 50 பொது மக்கள் காயமடைந்தனர்.

சுரங்கப் பாதையில் போக்கு வரத்து அதிகமாக இருந்த நேரத் தில் இந்தக் குண்டு வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

குண்டு வெடித்த பின்னர் மீட்புப் பணிகள் நடந்துகொண்டிருந்த போது அங்கு செய்தியாளர்கள் மற் றும் பொதுமக்கள் திரண்டு நின்று கொண்டிருந்ததாகவும் அந்தச் சம யம் அங்கு வைக்கப்பட்டிருந்த இரண்டாவது குண்டு தெய்வாதீன மாகக் கண்டுபிடிக்கப்பட்டு செய லிழக்கச் செய்யப்பட்டதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடித்திருந்தால் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரித் திருக்கும் என்று கூறிய ரஷ்ய அதி காரி ஒருவர் குண்டுவெடிப்புக்குச் செச்னியத் தீவிரவாதிகளே காரணம் என்றும் குறிப்பிட்டார். (ஒ)

# நிஜலிங்கப்பா காலமானார்

பெங்களூர்,ஓக.10

கர்நாடக மாநில முன்னாள் முதல்வர் எஸ்.நிஜலிங்கப்பா நேற்று சுகவீனம் காரணமாக 98 வயதில் காலமானார்.

1969ஆம் ஆண்டு இந்திராகாந்தி காங்கிரஸ் கட்சியில் பிளவை ஏற்ப டுத்தியபோது நேருக்கு நேராக அவரை எதிர்த்ததால் பிரபலமான நிஜலிங்கப்பா, மாநில சீரமைப்புக் குப் பின் கர்நாடகாவின் முதல் முதல்வராகவும் பதவி வகித்தார்.(ஒ)

# ராஜ்குமாரின் புகைப்படங்களுடன் வீரப்பனிடமிருந்து ஒலிநாடாச் செய்தி; கோபாலின் ஆள் கொண்டு வருகிறார்

சென்னை,ஒக.10

சந்தனக் கடத்தல்காரன் வீரப்ப னிடமிருந்து ஒலிநாடாவுடனும், கடத் தப்பட்ட நடிகர் ராஜ்குமார் மற்றும் மூவரின் நிலைமையை விளக்கும் புகைப்படங்களுடனும் கோபாலின் உதவியாளர் ஒருவர் வந்து கொண்டி ருப்பதாகத் தமிழ்நாடு பொலீஸ்து றைத் தலைவர் சர்மா நேற்று மாலை தெரிவித்தார்.

அந்த ஒலிநாடாவில் ராஜ்குமார், 'நக்கீரன்' கோபால் ஆகியோரின் தகவல்கள் இருப்பதாகத் தெரிவித்த சர்மா வீரப்பனின் பதில்கள் அதில் இருக்குமா என்பது குறித்து கருத் துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

கடத்தப்பட்டவர்கள் நலமாக இருப்பதாகவும், காட்டுப்பகுதியில் பெய்துவரும் அடை மழை காரண மாக அவர்களை விடுவிக்க காலத மாகக் கூடும் என்றும் பொலீஸ்து றைத் தலைவர் மேலும் தெரிவித் தார்.

நடிகர் ராஜ்குமாரை விரைவில் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள் ளுமாறு தமிழக முதல்வர் கருணா நிதியை இன்று நேரில் சந்தித்து கன்னடத் திரைப்பட வர்த்தக சங் கத்தினர் கோரிக்கை விடுக்கின்ற னர். (ஒ)

அரசமைப்புச் சட்ட நகல் ஏற்றுக்கொள்ளப்பட்டால்

# வடக்கு - கிழக்குச் சிங்களவர்கள் ஆற்றிலே குதிக்கவேண்டி வரும்!

## முன்னாள் அமைச்சர் தயாரத்தின எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 10

புதிய அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகல் சட்டமாக்கப்படும் பட்சத்தில் வடக்கு — கிழக்கில் வாழும் சிங்களவர்கள் ஆற்றில் தான் குதிக்க வேண்டி ஏற்படும்.

இவ்வாறு ஐ. தே. கட்சியின் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பீ. தயாரத்ன தெரிவித்துள்ளார்.

திகாமடுல்லவில் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் தாக்கல் செய்துள்ள புதிய அரசமைப்புச் சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக நாம் கை உயர்த்தினால் எம்மைப் போல தேசத்துரோகிகள் எங்கும் இருக்க மாட்டார்கள்.

இந்த நகல் சட்டமாக்கப்படும் பட்சத்தில் தமிழ் ஈழம் உருவாவது உறுதியாகி விடும். அவ்வாறு நடக்கும் பட்சத்தில் வடக்கு — கிழக்கில் வாழும் சிங்களவர்கள் ஆற்றில்தான் குதிக்க வேண்டி வரும்.

ஐ.தே.கட்சியுடன் இணக்கப்பாட்டுக்கு வந்த பல விடயங்கள் மட்டுமன்றி புதிதாக எவை எவையோ அரசமைப்புச் சீர்திருத்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன —

இப்படி தயாரத்ன மேலும் தெரிவித்தார். (இ-க)

## இலவசப் பாடநூல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 10

நல்லூர்க் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கான இலவசப் பாடநூல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதிபர்கள் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் கேட்டுள்ளார்.

தரம் 6 சுற்றாடல் கல்வி, தரம் 9, 10 சமூகக்கல்வியும் வரலாறும், தரம் 9 விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஆகிய பாடநூல்களே கிடைக்கப் பெற்றுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (க)

## மின்சார வசதி இன்றி வடலியடைப்பு மக்கள்

பண்டத்தரிப்பு ஊடாக வடலியடைப்புக்குச் செல்லும் பகுதியில் உள்ள மக்களுக்கு மின்சார வசதிகள் செய்துகொடுக்கப்படாமையால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பண்டத்தரிப்பில் இருந்து சில்லாலை செல்லும் பகுதியில் உள்ள மக்களுக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பான வேலைகள் மின்சார சபையினரால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடலியடைப்பு மக்கள் மீளக்குடியமர்ந்து பலகாலம் சென்றுவிட்ட நிலையில் இன்னும் அப்பகுதிக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

சில்லாலைப் பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவது போன்று வடலியடைப்புக்கும் விரைவில் மின்சார வசதி செய்து கொடுக்குமாறு அப்பகுதி மக்கள் மின்சார சபையினரிடம் கேட்டுள்ளனர். (இ-152)

## மிதிவெடியில் சிக்கினார்

பளைமாசார் பகுதியில் மிதிவெடியில் சிக்கி இளைஞர் ஒருவர் தனது காலை இழந்தார். அதே இடத்தைச் சேர்ந்த குமாரவேலு தயாபரன் (வயது 28) என்பவரே தென்னம்மட்டை வெட்டச் சென்ற போது காலை இழந்தவர் ஆவார். (இ-4)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு ரூ. 10 ஆயிரம் வேண்டும்

## மாவை. சேனாதிராஜா கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 10

இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் 2 ஆயிரம் ரூபா தற்காலிக நிவாரணம் 10 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி முகாம்களுக்கு விஜயம் செய்து மக்களின் குறைபாடுகளை அவர் நேரில் அவதானித்தார்.

இந்த விஜயத்தின் பின்னர் அகதி முகாம்களின் அவல நிலை தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சொல்லொணாத் துயரங்களைத் தொடர்ந்து அனுபவித்துவரும் மக்களுக்குச் சில அகதிமுகாம்களில் மாட்டுத்தீனிக்குகந்த அரிசியே வழங்கப்படுகிறது. கடந்த சில தினங்களாக வலிகாமம், வடமராட்சிப்பகுதிகளிலுள்ள அகதி முகாம்களின் நிலைமைகளை நேரில் சென்று நான் பார்த்தபொழுது என்னால் இதனை அவதானிக்க முடிந்தது. இதனை அரச உயர் அதிகாரிகளினதும் அமைச்சரினதும் கவனத்துக்கு உடன் கொண்டுவந்திருக்கின்றேன்.

தரமான அரிசி வழங்க நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளேன். இந்த முகாம்களில் வசித்து வரும் மக்களின் நிலைமை மிகவும் மோசமானவுள்ளது. இம்மக்களில் பலர் நான்கு தடவைக்கு மேல் இடம்பெயர்ந்து சகலவற்றையும் இழந்து வெற்றுமனிதர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்களுக்கு எதுவித வருமானமும் இல்லை. இந்த நிலையில் அரசாங்கம் அரிசி நிவாரணத்தை மட்டும் வழங்கி விட்டு, மேற்கொண்டு எதுவித உதவியும் வழங்குவதை நிறுத்திவிட்டது. பொறுப்புள்ள அரசின் கடமை இது தானா? என்று கேட்கவிரும்புகின்றேன்.

இந்த மக்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் 2 ஆயிரம் ரூபா எந்த அளவுக்கு அவர்களுடைய நிலைமையைச் சீராக்கும் என்று தெரியவில்லை அரசு கொடுக்க இருக்கும் இந்தத் தற்காலிக நிவாரணம் 10 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படவேண்டும் என வடக்குப் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சரைக் கோரியுள்ளேன்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் பனிதாபிமான ரீதியாக வழங்கிவரும் உதவிகளே இம்மக்கள் உயிர்வாழ ஆதாரவாக இருக்கின்றன. இந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை மிகவும் நன்றியுணர்வுடன் ஏற்றுக்கொண்டு பாராட்டும் அதே நேரம் இந்த உதவிகள் மேலும் அதிகரிக்கப்படவேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றேன். இது தொடர்பாக இந்த நிறுவனங்கள் கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு

வாழ்க்கைச் செலவு உயர்வு என்பது வட பகுதியில் மேலும் பல்வேறு காரணங்களால் அதிகரித்து மக்களுக்குச் சுமையாகக் காணப்படுகின்றது. மக்களுக்குக் கிடைக்கும் உதவிகளின் பெறுமதியும் இதனால் குறைவாகவே இருக்கின்றது. வறுமை மட்டமாகக் கருதப்படும் ஆயிரத்து 500 ரூபா வட பகுதிக்குப் பொருந்தாது. எனினும் அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ இத்தகையோருக்கு எதுவித உதவியையும் வழங்கமுன் வருவதில்லை. வருமான மட்டத்தை கவனத்திற்கொள்ளாது அகதிகள் சகலருக்கும் நிவாரணம் வழங்கப்படவேண்டும். கரையோரப் பகுதி மக்கள் தொடர்ந்து பல வருடங்களாகத் தொழிலின்றி அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் அண்மையில் ஏற்பட்ட இடப்பெயர்வால் மேலும் வருமானமின்றி கஷ்டப்படுகிறார்கள். சீவல் தொழிலாளர்கள் இடப்பெயர்வால் தமது தொழிலை இழந்து தவிக்கிறார்கள். தென்மராட்சி மக்கள் சகலவற்றையும் இழந்த நிலையில் இன்று இடம்பெயர்ந்துள்ளார்கள். இவையெல்லாம் வேதனைக்குரியவை.

இடம்பெயர்ந்துள்ள சிற்றூழியர்களுக்கும், இயங்காத தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்கள், அதுபோன்ற பல சங்கங்களின் ஊழியர்களுக்கும் உதவிகள் வழங்க அரசாங்க விதிமுறைகள் இடமளிக்கவில்லை. இந்த விதிமுறைகளை மீள்பரிசீலனைக்கு உட்படுத்திச் சம்பளம் வழங்கப்படாத, மற்றும் சங்க ஊழியர்களுக்கும் நிவாரண உதவி வழங்கப்படவேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5-9)

## வாசகர் திருமுகம்

### அம்மன் வீதியின் அவலம் அகலுமா?

நெருக்கடி மிகுந்த கால கட்டத்திலும் யாழ். மாநகர சபை தன்னால் இயன்ற சேவையை மிகவும் சாதுரியமாக மேற்கொண்டு வருவது எல்லோரும் அறிந்ததே. வழமை போன்று இம்முறையும் நல்லூர் உற்சவ காலத்தையொட்டி கடைகளுக்கு கூறுவிலை, வீதிப் போக்குவரத்து, சுகாதாரம் போன்ற வழமையான நடவடிக்கைகள் முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் சிற்றூர்திகள் தரிக்குமிடம் தெரிவு செய்யப்பட்ட அம்மன் வீதியில் குப்பைகள் வாகனம் ஓடமுடியாத நிலையில் உள்ள குண்டும் குழியும் பெரும் சிரமங்களை ஏற்படுத்துகின்றன.

சைக்கிள் ஓடுவோர் கிடங்குகளைத் தவிர்த்து ஓட, நடந்து செல்வோர் பாடு பெரும் பாடாகி வருகிறது. மக்கள்படும் அவதி கண்ணுக்குத் தெரியாமல் போனது விந்தையே. இந்த விடயம் காலங்காலமாக அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை

நல்லூர் உற்சவத்திற்காகச் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கும் மாநகரசபை இந்த வீதியை மட்டும் பாராமுகமாய் இருப்பது ஏன்? அடியார்களில் பெரும் எண்ணிக்கையானோர் இவ்வீதியால் போய் வருவதால் அவர்களின் இன்னலைப் போக்க வீதியைத் திருத்திக் குப்பைகளை அகற்றி அவர்களின் அவலத்தை நீக்கிஇருக்கலாம். மாநகரசபை அதிகாரிகள் தமது பார்வையை அம்மன் வீதிப்பக்கம் திருப்புவார்களா?

என். இராஜதேவன்.
அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

### புலமைப் பரிசில் எழுதும் மாணவர் அவல நிலை

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை இம்மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு வடமராட்சியில் மட்டுமே பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது இப்பரீட்சை எடுக்கும் மாணவர்களில் 60 சத வீதத்துக்கு மேலான மாணவர்கள் வலிகாமத்துக்கு இடம் பெயர்ந்திருக்கிறார்கள் இப்பரீட்சையை வலிகாமத்திலும் நடத்துவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை காட்டுகிறார்கள் இல்லை பரீட்சையை இங்கு நடத்துவதற்குஎன்ன நிர்வாகச் சிக்கல் உள்ளது என்பதும்தெரியவில்லை. வன்னிக்கு இடம்பெயர்ந்துள்ள மாணவர்களும் பரீட்சை எழுதத்தான் போகிறார்கள் அதிகாரிகள் தங்களுடைய வசதிக்கேற்ப பரீட்சைகளை நடத்துகிறார்களேயன்றி சிறுபிள்ளைகளின் வசதிகளைச் சிந்திக்கவில்லை. ஒரு பத்து வயதுப்பிள்ளை 30 கிலோமீற்றர் தொலைவிலுள்ள வடமராட்சிக்குச் சென்று பரீட்சை எழுத வேண்டிய நியதி தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

இது குறித்து நடவடிக்கை எடுத்து பரீட்சையை வலிகாமத்திலும் நடத்த ஏற்பாடு செய்ய உத்தரவிடும்படி கல்விப்பணிப்பாளரையும், சம்பந்தப்பட்டவர்களையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பாதிக்கப்பட்ட பெற்றோரும்,
மாணவர்களும்

### துயரம் நீங்காதா?

வடபகுதி யுத்த நிலைமை காரணமாக சில பகுதி மக்கள் இடம் பெயர்ந்து தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாதிருக்கிறார்கள் இவர்களில் தென்மராட்சி மக்கள் தமது வீடுவாசல்கள், உடமைகளை முற்றாக இழந்துள்ளனர். பல நாள்கள் பதுங்கு குழிகளுள் இருந்து தற்போது வெளியேறி வந்து நண்பர்கள், உறவினர்கள், கைவிடப்பட்ட வீடுகள் என்பனவற்றில் தங்கி இருக்கிறார்கள்.

முகாம்களில் இருக்கும் இடம் பெயர்ந்தோர் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுள்ளார்கள். ஆனால் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்போருக்கு இதுவரை எவ்வித உதவியும் கிடைக்கவில்லை.

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டை, நவாலி, சண்டிலிப்பாய் பகுதிகளில் தங்கி இருப்பவர்களுக்கு — அதாவது வீடுகளில் இருப்போருக்கு— அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி கிடைக்கவில்லை என்பதை என்னால் உறுதிசெய்ய முடியும்.

அவர்கள் தத்தமது பகுதி கிராம உத்தியோகத்தர் மூலம் சிபார்சு பெற்று பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பித்தும் கடந்த ஒன்றரை மாதங்களாக எதுவித உதவியும் கிடைக்காமைக்கான காரணம்தெரியாது விழிக்கிறார்கள்.

தென்மராட்சியிலிருந்து வந்தோர் கையில் எடுத்துவரக் கூடியவற்றையே எடுத்துவந்தனர் என்பது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நன்கு தெரிந்திருந்தும் அவர்களுக்கு உதவி கிடைக்காமல் போனதற்கான காரணத்தை அறிய முடியவில்லை.

முகாம்களில் தங்காது அவர்கள் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கி இருப்பதனால் அவர்கள் உதவி பெறுவதற்குத் தகுதியற்றவர்களா? எவருக்கு உதவாவிடினும் தென்மராட்சி மக்களுக்கல்லவா உதவ வேண்டும் பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்என்பதற்குஇலக்காக அவர்கள்இருக்கவேண்டுமா?

அரச சார்பற்ற நிறுவனங்களில் பொறுப்பான பதவிகள் வகிக்கும் தமிழ் பிரமுகர்கள் இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள்!

ஆனைக்கோட்டை. ந. சிவபாதம்

# உதயன்

## சொல்வது எதனை?

அரசாங்கம் கொண்டுவந்த அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகல் தடங்கலுற்று நின்றுவிட்டது. இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு என்னபாடுபட்டும் அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி விடப் போவதாக ஜனாதிபதியும் அவரது அரசாங்கத்தினரும் சங்கற்பம் செய்திருந்தனர்.

ஆனால் அவர்கள் நினைத்தது போன்று - திட்டமிட்டது போல - சட்டநகலை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெறமுடியவில்லை. அதனால் அரசினரால் தமது சங்கற்பத்தை நிறைவேற்ற முடியவில்லை. அவர்கள் நம்பியிருந்தது போல, கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் 150 எம்.பிக்கள் சட்டநகலுக்கு ஆதரவாக வாக்களிக்கும் சூழ்நிலை உருவாகவில்லை.

விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை என்று வெட்கத்துக்கு அஞ்சிக் கூறியது போன்று, இரண்டு காரணங்களைச் சொல்லி விவாதத்தையும் வாக்கெடுப்பையும் திகதி குறிப்பிடாமல் - காலவரையறை இன்றி - ஒத்திவைத்துள்ளது அரசு.

நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடைவதற்கு ஒரு சில நாள்களே இருக்கும்போது குறிப்பிட்ட அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் அவசரப்பட்டது. அந்த அவசரத்தில் பல உள் நோக்கங்கள் இல்லாமல் இல்லை.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடைசி நேரத்தில் காலை வாரியது தெரிந்தும், தென்னிலங்கையில் சிங்கள இனவாத, தீவிரவாத சக்தி பெரும் எதிர்ப்பு அலையைக் கிளப்பிவிட்ட பின்னரும் அரசாங்கம் தனது சக்தியை அதிகமாக மதிப்பிட்டுக் களத்தில் இறங்கியது.

எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கெனக் கொண்டுவரப்பட்ட சட்டநகலின் உள்ளடக்கம், அதே தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றாதிருப்பதை எண்ணிப்பார்க்காமல், அதனைக் கொண்டுவந்து ஒப்பேற்ற முனைந்தது.

தமிழர்களின் உரிமைகளை வழங்க முற்படும்போதெல்லாம் எதிர்க்கட்சியும் சிங்களத் தீவிரவாத சக்திகளும் அதற்குத் தடங்கல் போடுவது வழமை. அந்த வழமை இப்போதும் அரங்கேறி உள்ளது. அதேபோன்று தமிழர்களின் உரிமைகளை அவர்கள் திருப்தியுறும் வகையில் வழங்குவதற்குக் கொழும்பு அரசுகள் முன்வருவதில்லை.

அரைகுறைத் தீர்வுகளை வழங்க அரசுகள் முயற்சிப்பதும், அதனையேனும் தமிழர்களின் கைகளுக்கு எட்டவிடாமல் தடுப்பதும் இந்நாட்டின் வரலாறாகிவிட்டது. அதே அரசியல் காட்சி ஒன்று மீண்டும் அரங்கேறி உள்ளது. அவ்வளவுதான்!

தமிழர்களின் உரிமைகளை இலங்கை அரசு எதனாலும் தனித்து நின்று வழங்கமுடியாது - தமிழர் பிரச்சினையை எந்த அரசாங்கத்தினாலும் - தென்னிலங்கைத் தலைவர்களாலும் - தீர்க்கமுடியாது. மூன்றாந் தரப்பு ஒன்றின் பங்களிப்பு அவசியம். நியாயமான தீர்வு உருவாவதற்கு - நீதியுடனான சமாதானம் உண்டாவதற்கு - கனவான் தன்மையுடைய வெளியார் பங்கேற்பு அத்தியாவசியம் என்பது அரசின் இப்போதைய முயற்சியாலும், அந்த முயற்சி சந்தித்த தோல்வியாலும் மீண்டும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது - நிலைநாட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று நாடாளுமன்ற அரசியல், ஜனநாயக வழிமுறை என்பன இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவுமா என்ற சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளன. நீதியான, கனவான் தன்மையுள்ள, பரந்த நோக்குடைய, சமாதான நாட்டமுள்ள, துணிச்சல் கொண்ட, மானுடம் நிரம்பிய தலைவர் ஒருவரின் தனிமனித ஆட்சி தெற்கில் உதித்தால் மேலானது என்ற எண்ணத்துக்கும் வித்திடுகிறது. அல்லவா?

# பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் மறைவு குறித்த அஞ்சலிக் கூட்டம்

கொழும்பு,ஓக.10

பேராதனைப் பல்கலைக்கழக சமஸ்கிருதப் பேராசிரியரும் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை பேராசிரியரும் தலைவருமாக விளங்கிய அமரர் கா.கைலாசநாதக் குருக்களின் மறைவையொட்டிய அஞ்சலிக் கூட்டம் இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

சர்வதேச இந்துமத குருபீடத் தலைவர் சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் இன்று காலை 10.30 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை கொழும்பு - 13இல் அமைந்துள்ள கமலா மோடி மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறும்.

கப்பித்தாவத்தை பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா, பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக்குருக்கள், வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி விஜயலஷ்மி சிவச்சந்திரன், துர்க்கா குருகுல அதிபர் விஸ்வநாராயண சர்மா, சப்ரகமுவ பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிரதிப் பணிப்பாளர் நாயகம் வி.என்.மதியழகன் உட்படப் பலர் அஞ்சலி உரையாற்றுவர். (க)

# அரசு ஒருபோதும் பின்வாங்காது என்கிறார் அமைச்சர் திஸநாயக்க

கொழும்பு,ஓக.10

குறிப்பிட்ட சிலரின் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக அரசமைப்பு நகல் திட்டம் தொடர்பான நாடாளுமன்ற விவாதம் ஒத்திவைக்கப்படவில்லை. இந்தச் சட்டமூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து அரசு ஒருபோதும் மாறப் போவதில்லை.

மேற்கண்டவாறு இளைஞர் விவகார அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

விவாதத்தை ஒத்திவைக்கும் பிரேரணை மீது பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசு ஜனநாயக விதிமுறைகளின் அடிப்படையில் நடந்துகொள்கின்றது. விவாதத்தில் பங்குபற்றவும், திருத்தங்களைச் சமர்ப்பிக்கவும் சகல அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சிலரின் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக அல்ல.

87ஆம் ஆண்டு அரசமைப்புத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட சமயம், அதை எதிர்த்தவர்களை பழிவாங்கியது போன்று தற்சமயம் எதிர்ப்பு தெரிவித்தவர்களின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்றார் அவர். (இ-3-7)

# மலேசியக் கோடீஸ்வரர் கத்தியால் குத்திக் கொலை!

கொழும்பு,ஓக.10

இலங்கையில் வசித்துவரும் மலேசிய கோடீஸ்வரர் ஒருவர் கடந்த 5ஆம் திகதி அதிகாலை 5.00 மணியளவில் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார். அவர் மீது அசிற்றும் வீசப்பட்டது.

கிராந்துருக் கோட்டேயில் 800 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள "கிறீன்வூட் குறோவேர்ஸ்" பண்ணையின் உரிமையாளரான மோகன் யெப் என்பவரே கொல்லப்பட்ட கோடீஸ்வரர் ஆவார்.

கடந்த 4ஆம் திகதி இரவு இவரது மகளின் காதலனின் பிறந்தநாள் கொண்டாட்டம் கொழும்பிலுள்ள ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. அந்த விழாவில் கலந்துகொண்ட பின்னர் தனது மனைவியுடன் நுகேகொடயில் உள்ள வீட்டுக்கு அவர் திரும்பிக் கொண்டிருந்தார். அந்த அதிகாலை வேளையில் முகமூடி தரித்த இனந்தெரியாத இருவர் இவரது வீட்டுக்கு முன்னால் இவரது காரை மறித்து இவரை பின்புறம் இழுத்துச் சென்றனர். இவரின் முகத்தின் மீது அசிற்றை வீசியதுடன் 5 தடவைகள் தலையில் கத்தியால் குத்தியுமுள்ளனர். கடுமையான காயங்களுக்கு ஆளான கோடீஸ்வரர் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லும் வழியில் மரணமானார்.

இந்தக் கொலைக்கும் சீன இனத்தவர் ஒருவருக்கும் தொடர்பிருப்பதாக சந்தேகிக்கும் பொலீஸார் அவர் நாட்டைவிட்டுத் தப்பி ஓடக்கூடும் என நம்புவதால் அவர் பற்றிய தகவல்களை கட்டுநாயக்கா விமான நிலைய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர். (இ-2)

## நாகேஸ்வரத்தில் மஹோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.10

அளவெட்டி - நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 25ஆம் திகதிவரை நடைபெறும்.

எதிர்வரும் 23ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் அன்று பிற்பகல் 5 மணிக்கு உறியடி உற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஸ்ரீரங்கநாதன் இலட்சுமி பாத பூஜையும் முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன.

25ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெறும். (க-173)




# சாயி சிந்தனை

எவ்வளவு சிறப்பாகச் சமூகசேவை செய்து வந்தாலும் ஆடம்பரத்திற்கோ, அஹங்காரத்திற்கோ சிறிதளவு இடம் கொடுத்தால் உங்கள் செய்கைகள் யாவும் வியர்த்தமாகிவிடும். நீங்கள் பிறருக்கு சேவை செய்யும் போது பகவானுக்குச் சேவை செய்வதாகவே கருத்தில் கொள்ளவேண்டும். மிகுந்த பணிவுடனும், பக்தியுடனும் சேவை செய்திட வேண்டும். தொண்டு செய்யாத வாழ்க்கை உபயோகமற்றதே. மனித வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேற அன்புடன் பிறர்க்குப் பணிசெய்து அதையே இறைவனுக்கு அர்ப்பணமாக்கி மன நிறைவு பெறவேண்டும்.

தனக்கு ஏதோ ஒரு உபாதை நேரும் போது பிறர் உதவமாட்டார்களா என்று ஏங்குவது போல் யாரேனும் அவதிக்குட்பட்டிருந்தால் நீங்களே விரைந்து சென்று தாமதமின்றி தேவையான உதவியளிக்க வேண்டும். உங்களைப் பிறர் மதிக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், முதலில் நீங்கள் பிறரை மதிக்க முன்வரவேண்டும். பிறரைத் தூஷணை செய்து கொண்டும், நிந்தித்துப் பேசிக் கொண்டும் இருந்தால், பிறரிடமிருந்து நீங்கள் எப்படி மரியாதையை எதிர்பார்க்க முடியும்? பிறர் உங்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறீர்களோ அப்படி முதலில் நீங்கள் பிறரிடம் நடந்து கொள்ள வேண்டும்.

(ஆதாரம்:- சனாதன சாரதி)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



## ஓடி வாராய் முருகையா!

(எடுப்பு)

வல்லூழ் வினையோட்டும் வல்லவேற் கையோனே
பல்லூழும் போக்கியெம் பழவினை களைந்திடுவாய்
- (வல்லூழ்)

(தொடுப்பு)

பல்லூரில் வதிவோரும் பரந்துள் பதம்பணிய
நல்லூரில் காட்சிதரும் நவயுக நாயகனே
- (வல்லூழ்)

(முடிப்பு)

அமரர்தம் குறைதீர்க்க அசுரரை வேல்கொண்டு
சமரிட்டு வதம்செய்து சஞ்சலம் தீர்த்தவனே
தமரிங்கு படுந்துன்பந் தனைநீக்கத் தமிழர்க்காய்
அமர்ந்திட்ட மயில்மீது ஓடிவாராய் முருகையா
- (வல்லூழ்)

நல்லறிவு புகட்டிய நான்முகனைச் சிறையிட்டாய்
கல்லறிவு படைத்திட்ட கடும்சிந்த சமூகத்தின்
புல்லறிவைப் போக்கிட புகுந்தவர் நெஞ்சினிலே
நல்லறிவைப் புகுத்தியருள் நாட்டிடுவாய் முருகையா
- (வல்லூழ்)

- பழையூர் கு.சி.சுந்தரம்பிள்ளை

## விடியலைத் தந்திடு குமரா!

அழுகின்ற குரலுக்கு அபயமளிக்கும் குமரா
அல்லல்களை அறவே களைந்திடு குமரா
அண்டி வந்தோரை அரவணைக்கும் குமரா
அல்லும் பகலும் நினைக்கின்றோம் காத்திடு குமரா.....!

சேவற் கொடியை துணையாய்க் கொண்ட குமரா
சேமங்கள் பல செய்து காத்த குமரா
தேவர்க்கு ஆபத்தில் உதவிய குமரா
தேசமக்களுக்காய் விடியலைத் தந்திடு குமரா....!

- நாகமணி மகேந்திரலிங்கம்

## நல்லதொரு தீர்வைத் தா!

நல்லையிலே கோயில் கொண்ட வல்லவனே
அல்லலிலே புரளும் தங்கத் தமிழன் துயர்
எல்லையிலே சூழும் இருள் என்றும் அகன்றிடவே
நல்லதொரு தீர்வைத் தா மாமயிலோனே

– க. நாகேஸ்வரா

## வேலிடு கையை ஓங்காயோ!

நல்லைக் நகர்க் குமரா
எம்தமிழ் வீர மறவா!
எல்லையில்லா உன்னெழில் காண
எத்தனை எத்தனை தடைகளய்யா!
தொல்லைகள் சூழ்ந்திடும் வாழ்வில்
துயரத்தின் கதைகள் தொடருதைய்யா!
அல்லல்கள் பல்குழலாய் எழுந்திடும்
அவனியைப் பொசுக்குதய்யா இந்த
இன்னல்கள் போக்கிட உந்தன்
வேலிடு கையை ஓங்காயோ!

- எம்.சுயர்சன்
கோண்டாவில்.

# பொலித்தீனைத் தின்று உயிரிழக்கும் மான்கள்

திருகோணமலை,ஓக.10

திருகோணமலையிலுள்ள பேதிரிக் கோட்டையில் வாழும் மான்கள் பொலித்தீன் விஷத்தினால் மரணமடைந்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 100 ஆண்டுகளாக அந்தக் கோட்டைக்குள் மான்கள் வசித்துவருவதாகவும் தற்போது அவற்றின் எண்ணிக்கை சுமார் 200 எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மான்களில் சில திடீரென இறந்துவருவதாக திருகோணமலை மாவட்டச்செயலர் வனவளத் திணைக்களத்துக்குத் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அந்தத் திணைக்களத்தைச் சேர்ந்த மிருக வைத்தியர் மேற்கொண்ட விசாரணைகளில் மான்கள் பொலித்தீன் விஷத்தினால் இறந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் இறந்த 2 மான்கள் தொடர்பாக நடைபெற்ற மரண விசாரணையின் போது மான்களின் வயிற்றுக்குள் சுமார் ஒன்றரைக் கிலோ பொலித்தீன் பைகள் கண்டுபிடிக்கப்பட்டனவாம். (இ)

### உதயவாக்கு

கர்வம் சிலரைக் கேலிக்கு இடமாக்குகிறது. ஆனால் சிலரைப் பரிகாசத்துக்கு இடமாகாதபடி காக்கிறது.

- சிங்கிளேசன

### நாளை!

ஆடி 27
வெள்ளிக்கிழமை
திதி: துவாதசி
வைகறை 5.14 வரை
நட்சத்திரம்: மூலம்
பிற்பகல் 5.21 வரை
வரலக்ஷ்மி விரதம்
சுபநேரம்: 6.04 - 7.34
ராகுகாலம்: 10.34 - 12.04
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# உயிரே! உன் விலை என்ன?

*சுவீடன் நாட்டு வீதியொன்றில் சைக்கிளில் வந்த ஒருவர் வீதியால் சென்றவர்மீது லேசாக முட்டிவிட்டார். உடனே சைக்கிளில் வந்தவர் இறங்கி மற்றவரிடம் மன்னிப்புக் கோரினார்.*

*நாடாளுமன்றத்தில் முக்கியமான விவாதம் ஒன்று நடை பெற்றுக் கொண்டிருப்பதாகவும் அதற்குத் தான் பதிலளிக்க வேண்டியிருந்த காரணத்தால் சைக்கிளை சிறிது வேகமாக ஓட்டி வந்ததாகவும் தனது தவறை மன்னிக்குமாறும் அவர் கூறினார்.*

*சைக்கிளில அவ்வளவு அவசரமாக நாடாளுமன்றம் சென்றவர் பத்திரிகையாளர் அல்லர். சுவீடன் நாட்டுப் பிரதமர்தான். அது அந்த நாட்டில்.*

*நமது நாட்டில் அரசியல்வாதிகளின் கீழ்த்தரமான மற்றுமோர் நடவடிக்கை பற்றி ஆராய்கிறது "ராவய" சிங்கள வார இதழில் வெளியான இக்கட்டுரை.*

**- தமிழில் கஜனி -**

உயிருடன் வாழும் மனிதர்களுக்கு மாத்திரமன்றி இறந்த மனிதர்களுக்கும் ஒரு விலை (அல்லது பெறுமதி) உண்டு. அந்த விலையைத் தீர்மானிப்பவர்களில் முக்கியமானவர்கள் அரசியல்வாதிகளே.

சிறிலங்கா எதிர்நோக்கும் ஜனநாயக ரீதியான பிரச்சினைகளின் ஓர் அங்கமாகக் கருதப்படும் இனப் பிரச்சினை மற்றும் சாதிப் பிரச்சினைகள் காரணமாக சுமார் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால எல்லைக்குள் காவு கொள்ளப்பட்ட உயிர்கள் சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகம். வாழும் மார்க்கம் மற்றும் வாழ்விடங்களை இழந்தோரின் எண்ணிக்கை சுமார் 10 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்கு இலக்கான மக்கள் மற்றும் அவர்களது சொத்துக்கள் தொடர்பாக நட்டஈடு வழங்குவதற்கென ஒரு விசேட நிதியமும் நட்டஈடு வழங்குவதற்கென விசேட நடைமுறையும் உள்ளன.

ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் பயங்கரவாதிகளின் தாக்குதல் காரணமாக உயிரிழந்த சாதாரண பொதுமகன் ஒருவனின் விலை 50 ஆயிரம் ரூபா. அதாவது அவனது மரணத்திற்காக வழங்கப்பட்ட நட்டஈடு 50 ஆயிரம் ரூபா. அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மரணம் தொடர்பாக 6 லட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டது. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்களின் மரணம் தொடர்பாக ரூபா 1லட்சத்து 50 ஆயிரமும் படை அதிகாரி அல்லது சிப்பாயின் மரணம் தொடர்பாக ரூபா 75ஆயிரமும் நட்டஈடாக வழங்கப்பட்டன.

இரண்டாவது முறை ஜே.வி.பியினர் நடத்திய கிளர்ச்சியின்போது (1987,1988,1989 ஆம் வருடங்களில்) பயங்கரவாதம் காரணமாக நட்ட ஈடு பெறத் தகுதி பெற்றோர் ஜே.வி.பியினரால் கொலை செய்யப்பட்டவர்கள் மாத்திரமே. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ - சீருடை தரித்த - படையினரால் அல்லது உத்தியோகப்பற்றற்ற படையினரால் (அடியாட்களால்) கொல்லப்பட்டவர் தொடர்பாகவும் நட்டஈடு பெற வாய்ப்புக்கள் இல்லை. வடபகுதியில் அனுசரிக்கப்படும் நடைமுறைகளும் இதை ஒத்ததாகும்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகிறவர்களுக்கும் நட்டஈடு உண்டு. அதே நேரம் அரசபடைகளின் தாக்குதல்களுக்கு இலக்காவோருக்கு நட்டஈடு இல்லை.

தென்பகுதிப் பிரச்சினை மற்றும் வடபகுதி பிரச்சினைகளுக்கு இடை நடுவில் சிக்கி மரணமான ஏதுமறியாத அப்பாவி மக்களின் எண்ணிக்கை மிக அதிகமாயினும் ஒரு சிலருக்கு மாத்திரம் - அதுவும் அரசியல் ஆதரவு பெற்றவர்களுக்கு மாத்திரம் - நட்டஈடு பெறும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இவ்வாறு மரணமடைந்தவர்களுள் மிகவும் முக்கியமானவர்கள் எனக் கருதப்படுபவர்களும் மிகவும் விலை கூடியவர்களும் அரசியல்வாதிகளே.

இந்தப் பிரச்சினை காரணமாக இதுவரை ஜனாதிபதி ஒருவர், ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர், அமைச்சரவை உறுப்பினர் பலர், அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் எனக் குறிப்பிடத்தக்க பல முக்கியஸ்தர்கள் மரணமடைந்துள்ளார்கள்.

காயமடைந்து ஆச்சரியமான விதத்தில் உயிர் தப்பிய ஜனாதிபதிகள் இருவர். நாடாளுமன்றத்தில் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சின் போது அப்போது ஜனாதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினார். கடந்த டிசெம்பர் 18 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரக் கூட்டக் குண்டு வெடிப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உயிர்தப்பிய போதிலும் ஒரு கண்ணை அவர் இழக்க நேரிட்டது.

ஜனாதிபதி பதவி வகிக்கும் போது படுகொலை செய்யப்பட்ட ஆர்.பிரேமதாஸாவுக்கோ அல்லது ஜனாதிபதி தேர்தலில் ஓர் அபேட்சகராகப் போட்டியிட்டபோது படுகொலை செய்யப்பட்ட காமினி திஸநாயகாவுக்கோ அல்லது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருந்தபோது படுகொலை செய்யப்பட்ட விஜய குமாரரணதுங்காவுக்கோ நட்டஈடு வழங்கப்பட்டதா?

அப்படி நட்டஈடு வழங்கப்பட்டிருந்தால் அவர்களின் உயிர்கள் என்ன விலை போயிருக்கும் (நட்ட ஈடு வழங்கப்பட்டிருக்கும்) என்பது தெளிவாக தெரியவில்லை.

பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்தபோது குண்டுத். தாக்குதல்களுக்கு பலியான ரஞ்சன் விஜேரத்தினாவுக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை ரூபா 6 லட்சமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கத்தின் படுகொலை தொடர்பாகவும் 6 லட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டது. இதிலிருந்த அக்கால அரசியல்வாதிகளின் விலை (பெறுமதி) 6லட்சம் ரூபா என்பது தெளிவாகிறது. சாதாரண பொதுமக்களின் விலை 50 ஆயிரம் ரூபா. கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்னான்டோவின் கொலை தொடர்பாக வழங்கப்பட்ட நட்டஈடு 75 ஆயிரம் ரூபாவாகும்.

படுகொலை செய்யப்பட்ட மற்றுமொரு அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ சார்பிலும் 75 ஆயிரம் ரூபர்வே நட்டஈடாக வழங்கப்பட்டது. சாதாரண பொதுமகனின் மரணத்துக்காக வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையோடு படை அதிகாரிகளின் மரணம் தொடர்பாக வழங்கப்பட்ட நட்ட ஈட்டுத் தொகை ஒன்றரை மடங்கு மாத்திரமே. ஆனால் ஓர் அரசியல்வாதியின் உயிரின் விலை பொதுமகன் ஒருவரது உயிரின் விலையிலும் பார்க்க 12 மடங்கு அதிகமாகும். அதே நேரம் ஓர் இராணுவ அதிகாரியின் விலையிலும் பார்க்க ஓர் அரசியல்வாதியின் விலை 8 மடங்கு அதிகமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கையின்போது கொழும்பு நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் முன்னரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான குண்டுவெடிப்புச் சம்பவங்கள் காரணமாக பல தரப்பினரையும் சேர்ந்தோர் படுகொலை செய்யப்பட்டனர். இருப்பினும் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட இடங்கள் அரசியல் முக்கியத்துவமற்ற இடங்கள், அதாவது பொது இடங்களிலாகும். எனவேதான் அவர்களின் உயிர்களுக்கு அரசியல் பெறுமதி வழங்கப்படவில்லை.

இருப்பினும் கொழும்பு நகரசபை மைதானக் குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் ஆதரவாளர்களேயாவர். எனவேதான் அவர்கள்பால் அதிக கருணை காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. அதன்படி அவர்களுக்கு வழங்கப்படவிருந்த நட்டஈட்டுத்தொகை உடனடியாக செயற்படும் விதத்தில் அதிகரிக்கப்பட்டது. அதன்பின்னர் போர்வீரர் தினத்தன்று இரத்மலானையில் குண்டு வெடிப்புக்காரணமாக கொல்லப்பட்டவர்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் எனக் கருத நேரிட்டது. எனவே மீண்டும் கருணை காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. நட்டஈட்டுத் தொகையும் அதிகரிக்கப்பட்டது. தற்போது அவ்வாறான சம்பவத்தில் கொல்லப்படும் அரச சேவைச் சேராத சாதார்ண பொதுமகனுக்கு வழங்கப்படும் தொகை ரூபா 2 லட்சமாகும். அவர் அரச சேவை ஊழியனாக இருந்தால் ரூபா மூன்றரை லட்சம்.

படுகொலைக்கு இலக்கான அமைச்சர் சி.வி.குணரத்தின சார்பாக வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை 50 லட்ச ரூபாவாகும்.

இதை ஓர் அரசியல்வாதியின் தற்போதைய விலை(பெறுமதி) எனக் கருதலாம். இதன்படி தற்போது ஓர் அரசியல்வாதியின் விலை ஒரு சாதாரண பொதுமகனின் விலையைவிட 25 மடங்கு அதிகமாகும். அரச ஊழியரின் விலையைவிட 14 மடங்கு அதிகமாகும். ஒரு பொதுமகனின் விலைக்கு அரசியல்வாதியின் விலைக்குமிடையே உள்ள வித்தியாசம் 12 மடங்கிலிருந்து 25 மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதானது சிறிலங்கா ஜனநாயகத்தின் விகடத் தன்மையையே எடுத்துக்காட்டுகிறது. ★

## நீங்காத 90 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 1969 - 09 - 30

இறைவன் அடியில் 2000 - 05 - 10

**அமரர் சிவசுப்பிரமணியம் ஜெயதேவி**

அன்பின் சித்தியே!
உலகினில் உறவுகள் வீற்றிருக்க - சித்தி
உலகை விட்டு நீங்களும் போனதேனோ?
துயரத்தில் எம்மையெல்லாம் ஆழ்த்திவிட்டு - சித்தி
துயரத்துடன் நீங்களும் சென்றதேனோ?

மணமேடை வரும் என்று காத்திருக்க - சித்தி
பிணமேடை தான் வந்ததேனோ?
மணமாலை போட என்று காத்திருக்க - சித்தி
பிணமாலைதான் போட இறைவன் செய்ததேனோ?

நித்தம் நித்தம் ஏங்குகிறோம் - சித்தி
தித்திக்கும் உங்கள் அன்பை எண்ணி
உங்கள் ஆத்மா சாந்திக்காக - தினமும்
வாய்க்கால் தரவை விநாயகன் காலடியில் கண்ணீர்ப்பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

பிரிவினால் துயருறும்
பெறாமகன் -
**கஜதீபன் (கஜன்)**

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

(77068)

## புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்

நேற்றைய உதயனில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.9 இற்குரிய விடைகள் வருமாறு:-

**பகுதி I**

(1) 2 (2)3 (3)1 (4)4 (5)3
(6) 4 (7)2 (8)2 (9)2 (10)3
(11) 4 (12)3 (13)2 (14)2
(15) (அ-3) (ஆ-2) (இ-4) (ஈ-1)
(16) 3 (17) 2 (18) 4 (19) 3
(20) A பக்கம் (21) A பக்கம்
(22) B பக்கம் (23) A பக்கம்
(24) 1 (25) 2 (26) 2
(27) 2 (28) 5 (29) 4
(30) சதுரம் (31) செவ்வகம்
(32) முக்கோணி (33) 2 (34) 1
(35) 3 (36) 4 (37) 2 (38) 3
(39) 3 (40) 2

**பகுதி II**

(1) சுப்பிரமணிய பாரதியார்
(2) சிறுவர்களுக்கு
(3) காகம்,குருவி
(4) காகம்
(5) அது மனிதர்க்குத் தோழனடி பாப்பா.
(6) (i) பாப்பா, குழந்தை, குருவி, பறவை, கோழி, காக்கை, பால், பசு, நாய் (ii)பாப்பா
(7) i) குஞ்சு (ii) குட்டி (iii) கன்று
(8) ஏசுதல் (9) பட்சி,புள்
(10) சந்தோசம் (11) உள்ளத்தில்
(12) கவலை/துக்கம்
(13) பென்னம்பெரிய (14) கூடாத
(15) போ (16) BIRD (17) HEN
(18) COW (19) CROW (20) நீ
(21) பால் (22) நாய் (23)பாப்பா
(24) 3 (25) 5 (26) 2 (27) 6
(28) 1 (29) 4 (30) C (31) E
(32) A (33) B (34) F (35) D
(36) நன்மண் (37) மணல்மண்
(38) களிமண்
(39-41)ஆணிவேர்:- மா,வேம்பு,புளி
நாருரு வேர்:- தென்னை,நெல், பனை
(42) சரி (43) பிழை (44) சரி
(45) பிழை (46) தேசப்பற்று
(47)பக்தி (48) வியப்பு (49) இரக்கம்
(50)ஒற்றுமை (51) Bag (52)Flower
(53) Fish (54) Fruits (55) Orange
(56) Green (57) Pink (58) Purple
(59) ஆற்றங்கரை (60) முந்நூறு
(61) ஆல்+இலை (62) தேயிலை+நீர்
(63) வண்டுகள் (64) குடித்தன
(65) தேனை (66) அழகிய
(67) உறிஞ்சி (68) இனிமையான
(69) (i) ஏழாயிரத்து ஐந்நூற்றிருபது ரூபா (ii) 37,600 ரூபா
(70) (i)400பேர் (ii)1600 விசுக்கோத்துகள் (iii) 32பைக்கற் (iv)200 ரூபா
(71) (i) 12m 50cm (ii) 625 ரூபா
(72) (i) 4500g (ii) 40 ரூபா
(73) (i) 135நிமிடம் (ii) 07:45

## செஞ்சிலுவை வழித்துணையுடன் கப்பல் வந்து திரும்பிச் சென்றது

### இன்று மற்றொரு சேவை

யாழ்ப்பாணம்,ஓக.10

திருகோணமலையில் இருந்து திங்கட்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் புறப்பட்ட 'சிற்றி ஓவ் றிங்கோ' பயணிகள் கப்பல் செவ்வாய் காலை பருத்தித்துறையை வந்தடைந்து பிற்பகலில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

திருமலையில் இருந்து 405 பயணிகளுடன் வந்த இந்தக் கப்பல் பருத்தித்துறையில் இருந்து 400 பயணிகளுடன் புறப்பட்டது.

இந்தக் கப்பல் நேற்றுத் திருமலையில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டது. இன்று காலை பருத்தித்துறைக்கு வந்துசேரும் இந்தக் கப்பல் இன்று மாலையே திருமலை நோக்கிப் புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சேவையில் பயணம் செய்பவர்களுக்கான பயணச் சீட்டுக்கள் நேற்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் வழங்கப்பட்டன.(இ-3)

## தமிழ் எம்.பிக்கள் சிலரையும் இழுக்க ஐ.தே.க. முயன்றது!

### பேரம் பேசப்பட்டதாகத் தகவல்

கொழும்பு,ஓக.10

நாடாளுமன்றத்தில் அரசை ஆதரித்துவரும் தமிழ் எம்.பிக்களையும் தம்வசம் இழுக்க பேரம் பேசும் முயற்சியில் ஐ.தே.க. ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

அரசை ஆதரித்துவரும் தமிழ்க் கட்சிகளில் சில அரசமைப்புச் சட்ட நகலை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்று முடிவு எடுக்காத நிலையில் சந்தர்ப்பத்தைப் பார்த்துக்கொண்டிருந்தன.

இந்த நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கி அந்தக் கட்சிகளின் உறுப்பினர்களை விலைக்கு வாங்கி வெளிநாட்டுக்கு அனுப்ப ஐ.தே.க. முயன்றதாகத் தற்சமயம் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிநாட்டுப் பயணம் உட்பட ஒருதொகைப் பணமும் பேரம் பேசப்பட்டதாகக் கூறப்பட்டது.

(இ-3)

## சென்ற நாடெல்லாம் செந்தமிழ் ஓங்குக!

இன்று தமிழ்மொழி எழுச்சி காண்பதே
நன்று! அதற்குழைர் நாளும் வந்தது!
வென்று வாருமே! வேற்று நாட்டிடை
சென்ற தழிழரே! செந்தமிழ் ஓங்குக!

உலகுள நாடெல்லாம் ஊன்றிய தமிழரே
பலமுற எம்மொழி பாங்குடன் ஓங்கிட;
நலமுறப் பணிகளை நாட்டுக! சூட்டுக!
சிலமென அசையி இருப்பதை விலக்குக!

அறிவியல் ஆய்வுகள் அகிலம் எங்குமே
செறிவுடன் தமிழனிற் சேர்ந்திடச் செய்குவீர்!
பொறிமுறை புதுக்கியே புலமையில் உயருவீர்!
நெறிவழி நல்லவை நிமிர்ந்தெழ நிறுவுவீர்!

மதிவளம் பொருள்வளம் மனவளம் யாவுமே
கதிபெறக்; கலைபல கற்றுமே; நம்மவர்
அதிபயன் பெற்றிட ஆற்றுகை செய்திடும்!
புதியன படைத்திடும் புத்தொளி ஊட்டிடும்!

பண்டு தொல்புகழ் பரப்பி உலகெலாம்
நின்று கலைபண் பாட்டுடன் வீரமும்
நன்று நிலைத்த நலம்போல (ப்) பலம்பெற (ச்)
சென்ற நாடெல்லாம் தமிழ்த்தாய் வாழ்த்துவாழ்!


அறத்தில் நிலைத்திடு சத்திய வாழ்வுற
திறத்தில் பொலிந்திடு சீர்மையில் உயர்ந்திட
புறத்தில் புரிந்திடு காரியம் புகழ்பெற (ச்)
சிறப்புடன் போற்றுவாள்; தமிழ்ப்பணி செய்குவீர்!

*~ தீவகன்*

# ஈழத் தமிழருக்கு ஆதரவாகக் கருணாநிதி "தமிழ்த் தேசியம்" குறித்து குரல் எழுப்புவதேன்?

*ஈழத்தமிழருக்கு ஆதரவாக - இலங்கைப் பிரச்சினைக்கு செக்கோஸ்லோவாக்கியா பாணியில் தீர்வு காணப்பட வேண்டும் என - தடாலடியாய் பேசி, தமிழின உணர்வு கொப்பளிக்க உரையாற்றி பரபரப்பை ஏற்படுத்தினார் கருணாநிதி. அதன் பின்னணியை 'துக்ளக்'கில் ஆராய்கின்றார் வைத்தியநாதன்.*

இலங்கைப் பிரச்சினை தொடர்பான முதல்வர் கருணாநிதியின் சமீபத்திய பரபரப்புப் பேச்சுக்கள் கிளப்பிவிட்டிருக்கும் சர்ச்சைகள் ஏராளம். ஆளுக்கு ஆள் அவர் பேசியது சரியா, தவறா என்று அலசி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவரும் விட்டபாடில்லை. ஒரு நாள் அடக்கி வாசித்தால், அடுத்த நாள் அவரே தனது கருத்துக்கு மறுவியாக்கியானம் செய்து கொண்டிருக்கிறார். போதாக்குறைக்கு,



'நான் நினைப்பதைச் செய்கிறேன்; நீங்கள் சொல்வதைச் சொல்லிக் கொள்ளுங்கள்' என்று கண்டும் காணாமலும் இருக்கும் பிரதமரும், அவரது மத்திய அரசும் வேறு!

இந்த அளவுக்கு முதல்வரின் பிறந்தநாள் விழாப்பேச்சும், திருவண்ணாமலை திருமணவிழா பேச்சும் முக்கியத்துவம் பெற்றது எதனால்?

முதலாவதாக, பேசியிருப்பது பொறுப்பான பதவியில் இருக்கும் முதல்வர்.

அடுத்தபடியாக, முதல்வர் பதவியில் இருப்பவர் ஒரு முதிர்ந்த அரசியல்வாதியான கலைஞர் கருணாநிதி. அறுபதுகளில் அரசியல் வானில் பிரகாசிக்கத் தொடங்கி இன்றுவரை மக்கள் மத்தியில் பிரபலமாக இருக்கும் மாநில அரசியல்வாதிகள் இரண்டே பேர்தான். அவர்கள் பஞ்சாப் மாநில முதல்வர் பிரகாஷ்சிங் பாதலும், தமிழக முதல்வர் கருணாநிதியும். இவர்களுடன் அரசியல் பகடைகளை உருட்டிய மற்றவர்கள் ஒன்றில் - உதிர்ந்து விட்டனர்; அல்லது மக்களால் உதறி எறியப்பட்டு விட்டனர்.

அப்படிப்பட்ட முதிர்ந்த அரசியல்வாதி ஒருவர், அதுவும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஒருவர், ஒரு வெளிநாட்டு விவகாரத்தில், என்னதான் மொழியுணர்வும், இனவுணர்வும் இருந்தாலும், பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் தனது கருத்துக்களை வெளியிடலாமா என்பதுதான் கேள்வி. தனது பிறந்த நாள் விழாவில், இலங்கைப் பிரச்சினைக்கு செக்கோஸ்லோவேக்கியா பாணியில் தீர்வு காணச் சொன்னது மட்டுமல்ல; ஒரு திருமண விழாவில், 'திராவிட நாடு கோரிக்கைக்கான காரணங்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன' என்று முதல்வர் கருணாநிதி பேசி இருப்பதும் அதைவிட ஆச்சரியமான விஷயம்.

அறுபதுகளில், சீனப்படை எடுப்பைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட அவசர நிலைச் சட்டத்தின் அடிப்படையில்தான், பிரிவினைவாதத்தை ஆதரிக்கும் கட்சிகளை தடை செய்ய மத்திய அரசு முடிவெடுத்ததே தவிர, தி.மு.க.வின் வளர்ச்சியைக் கண்டு பயத்தால் அப்படி ஒரு சட்டம் பிறப்பிக்கப்படவில்லை.

ஆனால் முதல்வர் கருணாநிதி தனது திருவண்ணாமலை திருமணப் பேச்சில், தி.மு.கவின் வளர்ச்சியைக் கண்டு பயந்த அன்றைய காங்கிரஸ் அரசு, அதை பிரிவினைவாத சக்தி என்கிற முத்திரையைக் குத்தித் தடைசெய்ய முயன்றதாகக் கூறியிருப்பதை, காங்கிரஸின் மூத்த தலைவர்கள் யாருமே மறுக்கவோ, கண்டிக்கவோ இல்லை.

"தடைசெய்யப்பட இருந்த தி.மு.கவைக் காப்பாற்ற, அண்ணாத்துரை மேற்கொண்ட அரசியல் சாதுர்யம்தான் - திராவிட நாடு கோரிக்கையைக் கட்சி கைவிட்டதன் காரணம்" என்று முதல்வர் கருணாநிதி கூறியிருக்கிறார். தி.மு.கவின் பரிணாம வளர்ச்சி என்றும் அண்ணாத்துரையின் அரசியல் முதிர்ச்சியின் வெளிப்பாடு என்றும் பலராலும் பாராட்டப்படும் அந்த முடிவை, பெரும அரசியல் ராஜதந்திரம் என்று முதல்வர் கருணாநிதி வர்ணித்திருப்பது வருந்தத்தக்க ஒரு விஷயம். அதாவது - 'திராவிடநாடு கோரிக்கைக்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன' என்று அண்ணாத்துரை குறிப்பிட்டது வேண்டுமானால், கொள்கையைக் கைவிடுவதற்கு அவர் செய்த சப்பைக் கட்டு என்று கொள்ளலாமே தவிர, அதை அரசியலில் சாணக்கியத்தனம் என்றோ, பிற்காலத்தில் மீண்டும் பிரிவினைவாதத்தைக் கிளப்ப அவர் ஏற்படுத்தி வைத்த சந்தர்ப்பம் என்றோ நம்பமுடியாது.

கடந்த நாற்பது வருடங்களில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றங்கள் எத்தனை எத்தனையோ! எதிர்க்கட்சியாக இருந்த திராவிட இயக்கக் கட்சிகள், ஆளும் கட்சிகளாகிக் கடந்த முப்பத்தி மூன்று வருடங்களாகத் தொடர்ந்து ஆட்சியில் இருக்கின்றன. மாநிலத்தில் மட்டுமல்ல, மத்தியிலும் ஐந்து முறை ஆட்சியில் பங்கு பெற்று அகில இந்திய அரசியலிலும் அங்கம் வகிக்கும் அளவுக்கு திராவிடக் கட்சிகளின் கண்ணோட்டமும், சிந்தனையும் உருமாறி விட்டிருக்கின்றன.

மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஒரு கட்சி, சுமார் பதினைந்து வருடங்கள் ஆட்சியில் அமர்ந்து தமிழகத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் வாய்ப்பைப் பெற்ற ஒரு கட்சி, மத்திய ஆட்சியிலும் முக்கியமான பங்கு வகிக்கும் ஒரு கட்சி, இன்னும் திராவிட நாடு என்கிற பெயரில் தனிநாடு கோருவதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்று சொன்னால், ஒன்றில் அது அந்தக் கட்சியின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடு; அல்லது அது பிரிவினைவாதத்துக்குத் தூபம் போடும் தவறான முயற்சி.

அது மட்டுமா! வடக்கு வளர்கிறது: தெற்கு தேய்கிறது! என்கிற அன்றைய வாதத்திற்கு இன்று அர்த்தமில்லாமல் போய் விட்டது. உத்திரப்பிரதேசக்காரர்கள் மட்டும்தான் பிரதமராக முடியும் என்கிற நிலைமை மாறி, தென்னிந்தியாவிலிருந்து இரண்டு பிரதமர்கள் இந்தியாவின் தலைமைப் பொறுப்பில் அமர்ந்து விட்டனர். இன்று இந்தியாவிலேயே கல்வி, பொருளாதாரம், தொழில், சமுதாயமேம்பாடு, அடிப்படை வசதிகள் என்று எதையெடுத்தாலும் வட மாநிலங்களைவிடத் தென் மாநிலங்கள்தான் மிகப்பெரிய முன்னேற்றங்களை அடைந்திருக்கின்றன என்ப



தற்கு சாட்சிகள் தேவையில்லை. இவையெல்லாம், முதல்வர் கருணாநிதிக்குத் தெரியாதா என்ன?

அப்படியே இருந்தும், முதல்வர் கருணாநிதி இப்படியெல்லாம் பேசுவது எதனால் என்றுதானே கேட்கிறீர்கள்? காரணம் இருக்கிறது. அவரைப் பேச வைப்பது தமிழகத்தில் நிலவும் இன்றைய அரசியல் சூழ்நிலையும், அடுத்த வருடம் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலும்தான். அவர் பயப்படுவது ஜெயலலிதாவையோ, அ.தி.மு.கவையோ நினைத்து அல்ல; அவருடன் கை கோர்த்து நிற்கும் தோழமைக் கட்சிகளைத்தான். எல்லாவற்றையும் விட, முதல்வர் கருணாநிதியை பயமுறுத்தும் மிகமுக்கியமான விஷயம் - ஜாதீய ரீதியில் பிளவுபட்டுக்



கிடக்கும் தமிழ்நாட்டின் இன்றைய நிலைமை.

முக்குலத்தோர் மற்றும் கவுண்டர் சமுதாயங்களின் பெருவாரியான ஆதரவு அ.தி.மு.கவுக்கு இருக்கிறது. அதே போல, வன்னியர் சமுதாயத்தின் பெருவாரியான ஆதரவும்

## தேர்தல் பயத்தில் தி.மு.க.!

டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சிக்கு. தாழ்த்தப்பட்ட இன மக்களில் பள்ளர் எனப்படும் பிரிவினர் டாக்டர் கிருஷ்ணசாமியின் புதிய தமிழகத்தை ஆதரிக்கின்றனர். பறையர் எனப்படும் பிரிவினரின் பெரும்பாலானோர் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைக்கு ஆதரவு. இதுதான் இன்றைய தமிழக அரசியல் நிலைமை.

இன்னொரு முக்கியமான சமுதாயமான நாடார் இன மக்களைப் பொறுத்தவரை, அவர்களது ஆதரவு தொகுதிக்குத் தொகுதி மாறுபட்டுக் காணப்பட்டாலும், அவர்கள் வாக்களிப்பதும் ஜாதி அடிப்படையில்தான் என்பது உண்மை.

1998 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.அணி முப்பது இடங்களைப் பெற்றதற்குக் காரணம் வன்னியர், முக்குலத்தோர், கவுண்டர் மற்றும் நாடார் சமூகத்தினரின் பெருவாரியான ஆதரவும் அந்த அணிக்கு இருந்தால்தான். பாட்டாளி மக்கள் கட்சி தி.மு.கவின் தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியில் சேர்ந்ததும், நாடார் சமூகத்தின் ஒட்டுமொத்த ஆதரவு அ.தி.மு.க. அணிக்குக் கிடைக்காததும்தான் - 1999ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அந்த அணியின் வெற்றி கணிசமாகப் பாதிக்கப்பட்டதற்கு முக்கியமான காரணங்கள். கடந்த தேர்தலில் முக்குலத்தோர் பெரும்பான்மையாக உள்ள தென்மாவட்டங்களில் அ.தி.மு.க. அணியும், வன்னியர்கள் அதிகமாக வாழும் வடமாவட்டங்களில் தி.மு.க. அணியும் வெற்றி பெற்றிருப்பதும் - ஜாதி எந்த அளவுக்கு அரசியலை ஆக்கிரமித்து விட்டிருக்கிறது என்பதற்கு சாட்சிகள்.

விவரம் தெரிந்த முதிர்ந்த அரசியல் பார்வையாளர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்ன தகவல் இது. "கோவை நாடாளுமன்றத் தொகுதியில் பி.ஜே.பியைச் சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணனின் வெற்றிக்கு ஜாதிதான் காரணமே தவிர பி.ஜே.பி. ஆதரவோ, தி.மு.க. மீதுள்ள அனுதாபமோ காரணமல்ல" என்பது அவரது வாதம்.

"கவுண்டர்கள் மத்தியில் எப்போதுமே அ.தி.மு.கவுக்குத்தான் ஆதரவு. கவுண்டர் அல்லாத ஒரு வேட்பாளரை அ.தி.மு.க. நிறுத்தினால் மட்டும்தான், அந்த ஆதரவு ஜாதிய அடிப்படையில் பிற கட்சிக்கு மாறும். அ.தி.மு.க. அணியில இருந்த வலது கம்யூனிஸ்ட் கட்சி, அதன் பொதுச்செயலாளர் நல்ல கண்ணுவுக்குப் பதிலாக, கவுண்டர் இனத்தைச் சேர்ந்த திருப்பூர் சுப்பராயனை வேட்பாளராக நிறுத்தியிருந்தால் கோவை நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. அணிதான் வெற்றி பெற்றிருக்கும்" - இதுவும் அவரது கணிப்பாகும்.

இதே போல, தாமரைக்கனி விவகாரம் கிளம்பி நாடார் சமுதாயம் கோபப்படாமல் இருந்திருந்தால், சிவகாசி, திருச்செந்தூர் மற்றும் நாகர்கோவில் தொகுதிகள் அ.தி.மு.க. அணிக்கு சாதகமாக திரும்பி இருக்கும் என்பது அவரது வாதம். இந்த வாதங்களை முழுமையாக மறுப்பதற்கில்லை. அதேபோல, பா.ம.கவுக்கு வன்னியர் சமுதாயத்தில் இருக்கும் ஆதரவுதான் தி.மு.க. அல்லது அ.தி.மு.க. அணிகளின் வெற்றி வாய்ப்புக்களை வடமாவட்டங்களில் நிர்ணயிக்கின்றன என்பதையும் மறுக்க முடியாது.

வேறு பல காரணங்கள் இருந்தாலும் சமீபத்தில் நடந்து முடிந்த தஞ்சாவூர் கல்யாணத்தில், "சசிகலா குடும்பமும், அ.தி.மு.கவும் வேறு வேறல்ல" என்று பேசியதற்கு, முக்குலத்தோர் சமுதாயத்தின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வதும் ஒரு காரணமாக இருந்திருக்கும். எம்.ஜி.ஆர்.கட்சி, ஜெயலலிதா கட்சி என்பதெல்லாம் போய் முழுக்க முழுக்க ஒரு முக்குலத்தோர் மற்றும் கவுண்டர் இனத்தவரின் கட்சியாக மாறிவிட்டிருக்கிறது அது. அ.தி.மு.க. ஓர் அரசியல் கட்சி என்று சொல்லப்படுவதை விட, பா.ம.க., புதிய தமிழகம் போல ஒரு ஜாதிக்கட்சி என்று முத்திரை குத்தப்படுவதில் கூடத் தவறில்லை.

இப்படி ஜாதி ரீதியாக வாக்குகள் பிளவுபட்டுக் கிடப்பதுதான், முதல்வர் கருணாநிதியை மிகவும் பாதித்திருக்கும் விஷயம் என்பதை அவரது சமீபத்திய பேச்சுக்களே அடையாளம் காட்டுகின்றன. அவ



ரது பயம் நியாயமானதும் கூட.

அகில இந்திய ரீதியில் காங்கிரஸுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையும், தமிழகத்தில் தி.மு.கவின் தர்மசங்கடமும் ஏறக்குறைய ஒரே மாதிரியானதுதான்.

ஹிந்து, முஸ்லிம், உயர்ஜாதி, பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் - என்று வாக்குகள் பிரிந்ததன் விளைவுதான் காங்கிரஸ் பலவீனப்பட்டதன் மிகப்பெரிய காரணம். காங்கிரஸ் மட்டுமல்ல, கூடிய சீக்கிரமே பி.ஜே.பி. போன்ற தேசிய கட்சிகளும் சந்திக்க இருக்கும் தர்மசங்கடமும் இதுதான். அதேதான், தமிழகத்தில் எந்தவித ஜாதி முத்திரையும் இல்லாமல் வளையவரும் தி.மு.க., த.மா.கா. மற்றும் காங்கிரஸ் கட்சிகள் நிலைமை.

இப்போது மக்களின் மனதை அலட்டும் தேசிய பிரச்சினைகள் எதுவும் இல்லை. கடந்த தேர்தலில் மிகப் பெரிய பிரச்சினையாகவிருந்த ஊழல், இப்போது பளபளப்பு மங்கிப் போய் இருக்கிறது. அ.தி.மு.கவின் தேர்தல் தோல்வியும், ஜெயலலிதா மற்றும் சசிகலா சிறையில் அடைக்கப்பட்டதும் மக்கள் மத்தியில் அவர்கள் மீது இருந்த கோபத்தை அகற்றி விட்டதாகத் தெரிகிறது. சொல்லும்படியாக எந்தவொரு பிரச்சினையும் மக்களை ஜாதிரீதியான வாக்களிப்பிலிருந்து விடுவிக்கும் அளவுக்கு முக்கியமானதாக




இல்லை. இந்த மாற்றத்தை ரஜனிகாந்த் போன்ற மக்கள் செல்வாக்கு மிக்க புதியவர்கள், புதிய கட்சி தொடங்கி தேர்தல் களத்தில் குதித்தால் எதிர்பார்க்கலாம். ஆனால் அதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை.

இப்படி ஒரு சூழ்நிலையில் தி.மு.கவுக்குத் தேர்தல் முடிவுகள் பாதகமாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது. ஐந்து வருட ஊழலற்ற நல்லாட்சி, ஜாதிமத நல்லிணக்கத்துக்காக் குரல் கொடுத்த ஆட்சி, தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு நல்ல பல திட்டங்கள் வகுத்த ஆட்சி என்பன போன்ற 'பொசிடிவ்'(சாதகமான) சாதனைகள் மட்டும் தேர்தலில் வாக்குகளைப் பெற்றுத்தந்துவிடா. அதுவும் ஜாதி ரீதியாக வாக்குகள் பிரிந்து கிடக்கும்போது , இவையெல்லாம் தேர்தலில் எந்தவித மாற்றங்களையும் ஏற்படுத்துவதில்லை என்பதுதான் அனுபவம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், மக்களின் மனதை ஜாதி ரீதியான பிரிவிலிருந்து திசை திருப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது தி.மு.க.. வேறு எந்தத் தேசிய, மாநிலப் பிரச்சினைகளும் இல்லாததால், முதல்வர் கருணாநிதி மேற்கொள்ளும் முயற்சிதான் தமிழின உணர்ச்சியையும், திராவிட நாடு கோரிக்கையையும் தூசி தட்டி உயிர் கொடுப்பது. இதை சொல்லிப் பார்ப்போம். எடுபட்டால், மேலும் தீவிரமாக்கி ஜாதி ரீதியான பிரிவிலிருந்து தேர்தல் வாக்களிப்பைத் திசை திருப்பி விடலாம் என்று அவர் கணக்குப் போடுகிறார் என்றுதான் தோன்றுகிறது.

பாரதிய ஜனதா கட்சியுடனான கூட்டணிகளும் கணிசமாக சிறுபான்மையினரின் ஆதரவை இழந்துவிட்ட நிலையில், ஜாதி ரீதியான பிரிவுகளும் பாதிப்பை ஏற்படுத்தினால், அடுத்த தேர்தலில் தி.மு.க. மிக அதிகமாகப் பாதிக்கப்படும். இந்தச் சூழ்நிலையை மாற்றி, ஜாதி மற்றும் மதத்தின் அடிப்படையிலான பிரிவைத் தடுப்பதற்கு, 'தமிழ் தேசியம்' என்கின்ற ஆயுதத்தால் மட்டும்தான் முடியும் என்பது முதல்வர் கருணாநிதியின் மன ஓட்டமாக இருக்கும். ஏற்கனவே, இலங்கைப் பிரச்சினையில் ம.தி.மு.க.வும், பா.ம.கவும் வரிந்து கட்டிக்கொண்டு விடுதலைப் புலிகளை ஆதரிப்பதால், தி.மு.கவின் தமிழினப்பற்றின் மீது சந்தேகம் ஏற்பட்டு விடுமோ என்கின்ற பயம் வேறு



கருணாநிதிக்கு.

ஆங்கிலத்தில் 'Testing the waters' என்று சொல்வார்கள். அது போல, 'செக்கோஸ்லேவோக்கியா' போல இலங்கை பிரிவது அவர்களுக்கு நல்லது; திராவிடநாடு கோரிக்கைக்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன' - போன்ற முதல்வர் கருணாநிதியின் பேச்சுக்கள் தேர்தலை எண்ணி அவர் பறக்கவிடும் காற்றாடிகளே.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கோப்பாய், மடத்தடி இருபாலையைச் சேர்ந்த சந்திரன் கேதீஸ்வரி என்பவருடைய வி.அ.அ (இல-0903038374), யாழ். கோப்பாய் மகா வித்தியாலய பாடசாலை அ.அட்டை என்பன (28-07-2000) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திரு.பொ.சந்திரன், சின்னர் கோயில், கோப்பாய் தெற்கு, கட்டைப்பிராய். (உஷா பன்சி ஹவுஸ் கடை அருகில்) என்னும் விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (77133)

அளவாவோடை, சுன்னாகத்தைச் சேர்ந்த சு. இராசநாயகம் என்பவருடைய நாட்குறிப்பு (Dairy) 02-08-2000 அன்று சுன்னாகம் சந்தையில் தவறிவிட்டது. அதில் முக்கியமான உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி எண்களும் முகவரிகளும் உண்டு. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நாகம்ஸ் காலணியகம், சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (77144)

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்கு உள்ளன. சனி, ஞாயிறு மாலை 2-6 வரையும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திரு A. ராகவன் (கஸ்யோ), 3ஆம் கட்டை, பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு. (77150)

## சோதிடம்

சாதகக்குறிப்பு பலன், திருமணப்பொருத்தம் பார்ப்பதற்கும் உள்ளூர், வெளியூர் சாதகக் குறிப்புக்கள் எழுதிக் கொள்ளவும். தொடர்பு:- சிவா சோதிடர், 111, கோயில்வீதி, நல்லூர். (77151)

## பொய்யா மொழி சோதிடம்

தடைப்படும் திருமணம் விரைவில் நடைபெற, வெளிநாட்டுப் பிரயாணத்தடை நீங்க ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சனி, செவ்வாய்க் கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறைவீதி, நல்லூரிலும் ஞாயிற்றுக் கிழமைகளில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (77137)

## இசைவகுப்பு

கீதவாஹினி இசைக்கல்லூரியில் கல்விபயின்று அறிமுறைத் தேர்வுக்குத் தோற்றும் சகல மாணவர்களும் எதிர்வரும் (14-08-2000) திங்கட்கிழமை, இல.104, சட்டநாதர் கோயில் வீதியில் வசிக்கும் ஆசிரியை கிருஷ்ணவேணியுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

(77148)

உ

## வரலக்ஷ்மி விரதபூசை

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் நாளை (11-08-2000) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு விரத பூசை நடைபெறும். அடியார்கள் விரதமிருந்து வரலக்ஷ்மியின் காப்பை வாங்கிக் கையில் அணிந்து லக்ஷ்மியின் அருளைப் பெறுவீர்காள்.

பிரதமகுரு

தாணு. வாசுதேவக்குருக்கள்

(77061)

## வாழ்த்துகின்றோம்

தீவுப்பகுதி ஈ.பீ.டி.பி அரசியற் பொறுப்பாளரும்
ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தலைவருமாகிய

**திரு. என். மதனராசா**

(தோழர் மனோ) பா.உ

அவர்கள் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற
உறுப்பினராக நியமிக்கப்பட்டமை குறித்து
எமது நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்

தலைவர், உறுப்பினர்கள்,
செயலாளர், பணியாளர்,
ஊழியர்கள்.

*பிரதேசசபை,*
*நெடுந்தீவு*

(C/12449)

## பாராட்டுகின்றோம்

*சாவகச்சேரி நகரிற்கு பெருமை சேர்க்கும் வகையில்*
*யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட*
*புதிய பீடாதிபதியாகப் பதவி உயர்வு பெற்று,*
*யாழ். பல்கலைக்கழக முதற் பெண் பீடாதிபதி*
*என்ற பெருமைக்குரிய*

**பேராசிரியர்**
**செல்வி வசந்தி அரசரட்ணம்**

அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.
பாராட்டுகின்றோம்.

கு. சபாபதிப்பிள்ளை
குடும்பத்தினர்.

*சாவகச்சேரி.*

(77149)

## பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஓக.10

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் திறன் விருத்தி மையத்தினால் பல்வேறு பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வயறிங் றீ வைண்டிங், ரீ.வி, றேடியோ திருத்துதல், தையல் இயந்திரம் திருத்துதல், புத்தகம் கட்டுதல், உடையமைத்தல், தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் "செயலாளர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், மானிப்பாய் வீதி, உரும்பிராய்" எனும் முகவரிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

(க)

# மாகாணசபை அதிகாரிகளுக்கு நவீன தொழில் நுட்பப்பயிற்சி

திருகோணமலை,ஓக.10

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட திணைக்களங்களில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு நவீன தொழிற்நுட்பம்குறித்த துறைசார்ந்த பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருப்பதாக மாகாணப் பொது, நிர்வாக அமைச்சுச் செயலாளர் எஸ். பரமலிங்கம் தெரிவித்தார்.

மாகாண மட்டத்தில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு நவீன தொழில்நுட்பம் குறித்த பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாக அவர்கள் மாறி வரும் உலகத்துக்கு ஏற்பப் பணியாற்ற முடியாத நிலையில் உள்ளனர்.

இதன் காரணமாக அவர்களுக்கு உள்ளூரிலும், வெளிநாட்டிலும் துறைசார்ந்த பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சியை அளிப்பதற்கு முன்னோடியாக விண்ணப்பங்கள் கோரப்படவிருக்கின்றன.

இப்படி அவர் மேலும் சொன்னார். (இ-3)

## பரீட்சை நிலையம் இடம்மாற்றம்

வடமராட்சி,ஓக.10

வடமராட்சி கிழக்கில் செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஏற்படுத்தப்பட்ட 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் அம்பன் அமெரிக்கமிஷன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

(இ-173)

## வலி.கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி.

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 23.08.2000ஆம் திகதி நண்பகல் 12.30 மணிவரை என்னால்ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றையதினமே பிற்பகல் 2.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை, "தவிசாளர், வலி.கிழக்கு பிரதேசசபை, நீரவேலி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை, "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கும் எதிர்வரும் 22.08.2000ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்வி பத்திரப் பணம் |
|---|---|---|
| 01. நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய ச.ச.நிலைய திருத்த வேலை | 1000.00 | 250.00 |
| 02. புத்தூர் லிங்கன் " திருத்தம் | 1000.00 | 250.00 |
| 03. யோகபுரம் அண்ணா " பாலர் பாடசாலை திருத்தம் | 1000.00 | 250.00 |
| 04. புத்தூர் கிழக்கு மகாத்மாகாந்தி ச.ச.நி. திருத்தம் | 1000.00 | 250.00 |
| 05. ஆவரங்கால் பொதுமயானம் திருத்தம் | 1500.00 | 350.00 |
| 06. நீர்வேலி சீயாக்காடு மயானமடம் அமைத்தல் | 1000.00 | 250.00 |
| 07. உரும்பிராய் செல்வபுரம் உதயசூரியன் ச.ச.நிலைய பாலர் பாடசாலை திருத்தம் | 1000.00 | 250.00 |
| 08. ஊரெழு கலைவாணி ச.ச.நிலைய அரங்கு திருத்தம் | 1000.00 | 250.00 |
| 09. உரும்பிராய் மேற்கு திருக்குமரன் ச.ச.நி. திருத்தம் | 1000.00 | 250.00 |
| 10. நீர்வேலி பரமேஸ்வரி ச.ச.நி. திருத்தம் | 1000.00 | 250.00 |
| 11. ஆவரங்கால் கிழக்கு மணற்பகுதி மயானவீதி திருத்தம் | 1000.00 | 250.00 |
| 12. புத்தூர் அறிவொளி ச.ச.நி. திருத்தம் | 1000.00 | 250.00 |
| 13. உரும்பிராய் காந்திஜி " " | 1000.00 | 250.00 |
| 14. வளலாய் ச.ச.நிலைய பாலர் பாடசாலை கட்டட திருத்தம் | 1000.00 | 250.00 |
| 15. அச்சுவேலி அன்னை திரேசா ச.ச.நி. கட்டடம் அமைத்தல் | 1000.00 | 250.00 |
| 16. அச்சுவேலி ஞானவைரவர் ச.ச.நி. திருத்தம் | 1000.00 | 250.00 |
| 17. புத்தூர் உப.அலுவலக மலசலகூடம் திருத்தம் | 500.00 | 150.00 |
| 18. புத்தூர் கலைமதி ச.ச.நி. கட்டட தொடர்வேலை | 1000.00 | 250.00 |
| 19. வளலாய் கலைக்கதிர் ச.ச.நி. தொடர்வேலை | 1500.00 | 350.00 |
| 20. இருபாலை கிழக்கு உதயதாரகை ச.ச.நி. பாலர் பாடசாலை கட்டடம் அமைத்தல் | 1500.00 | 350.00 |
| 21. கோப்பாய் வள்ளியம்மன் ச.ச.நி. கட்டடத் திருத்தம் | 1000.00 | 250.00 |
| 22. கதிரிப்பாய் சுப்பிரமணிய ச.ச.நி. " " | 1000.00 | 250.00 |
| 23. ஊரெழு வளர்பிறை " " " | 1000.00 | 250.00 |
| 24. பத்தைமேனி அன்னை இந்திரா ச.ச.நி கட்டடத் திருத்தம் | 1000.00 | 250.00 |
| 25. ஆவரங்கால் கலையகம் ச.ச.நி. பாலர் பாடசாலை தொடர் வேலை | 1000.00 | 250.00 |
| 26. ஆவரங்கால் சர்வோதய ச.ச.நி. பாலர் பாடசாலை கட்டடம் அமைத்தல் | 1500.00 | 350.00 |
| 27. உரும்பிராய் மேற்கு சரஸ்வதி ச.ச.நி. திருத்தம் | 1000.00 | 250.00 |
| 28. இருபாலை கிழக்கு ச.ச.நி. திருத்தம் | 1500.00 | 350.00 |
| 29. ஊரெழு மேற்கு சரஸ்வதி ச.ச.நி. திருத்தம் | 1000.00 | 250.00 |
| 30. உரும்பிராய் இருளன் மயானம் திருத்தம் | 1000.00 | 250.00 |
| 31. புத்தூர் சிந்துசிட்டி மயானமடம் அமைத்தல் | 1500.00 | 350.00 |
| 32. புத்தூர் நிலாவரை " " | 1500.00 | 350.00 |
| 33. புத்தூர் வளர்மதி ச.ச.நிலையத் திருத்தம் | 500.00 | 100.00 |
| 34. புத்தூர் மத்திய " " | 500.00 | 100.00 |
| 35. உரும்பிராய் பொக்கணை குடியேற்ற வீதி திருத்தம் | 1500.00 | 350.00 |
| 36. அச்செழு குறுக்குவீதி திருத்தம் | 1000.00 | 250.00 |
| 37. உரும்பிராய் இளைஞர் ச.ச.நி. தண்ணீர்த் தாங்கி அமைத்தல் | 1000.00 | 250.00 |
| 38. பொக்கணை சுடலைமடம் அமைத்தல் | 1500.00 | 350.00 |
| 39. அச்சுவேலி பொது விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கு அமைத்தல் (பவிலியன்) | 2000.00 | 500.00 |

மேற்குறிப்பிட்ட வைப்புப் பணத்தையும், கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 22.08.2000ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

*வலி.கிழக்கு பிரதேசசபை,*
*தலைமை அலுவலகம்,*
*நீர்வேலி.*
09.08.2000

**பூ.குணசிங்கம்**
**ஜே.பி.யு.எம் தவிசாளர்**
**வலி.கிழக்கு பிரதேசசபை,**
**நீர்வேலி.**

(c/12447)

# ஷெல், குண்டுச் சத்தங்கள் மத்தியில் தென்மராட்சி கிழக்குப் பாடசாலைகள்

ஷெல் வீச்சுக்கள் மற்றும் குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் அவற்றின் பயங்கரச் சத்தங்களுக்கு மத்தியிலும் தென்மராட்சி கிழக்குப் பகுதியில் 12 பாடசாலைகள் தற்பொழுது இயங்கி வருகின்றன என்று தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசன் தெவித்தார்.

அண்மையில் தென்மராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு விஜயம் செய்த அவர் அங்குள்ள சில பாடசாலைகளைப் பார்வையிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:- தென்மராட்சி கிழக்கு பாடசாலைகளுக்கு நான் விஜயம் செய்தபோது அங்கு 12 பாடசாலைகள் இயங்குகின்றன என்பதனைத் தெரிந்து கொண்டேன்.

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம், வரணி ம.வி., கெற்பலி ஜீ.ரி. எம். எஸ். ஆகிய நான்கு பாடசாலைகளுக்கு மட்டுமே என்னால் விஜயம் செய்ய முடிந்தது.


இந்தப் பாடசாலைகளில் ஆயிரத்து 621 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்; 69 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களைப் போதிப்பதற்கு அங்கு ஆசிரியர்கள் இல்லை.

மேற்குறிப்பிட்ட நான்கு பாடசாலைகளுடன் வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தி. வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், கரம்பைக்குறிச்சி அ. த. க. பாடசாலை, கரம்பை அ. மி. த. க பாடசாலை, குடமியன் அ. த. க பாடசாலை, மிருசுவில் அ. த. க பாடசாலை, எழுதுமட்டுவாள் அ.த.க பாடசாலை, போக்கட்டி அ த. க. பாடசாலை, போன்ற பாடசாலைகளை அங்கு இயங்கி வருகின்றன.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5-10)

## நினைவலையில் 10 ஆண்டுகள்



### அமரர் வைத்திலிங்கம் சிங்கவேலு

(முன்னாள் உரிமையாளர், மருதனார்மடம் எரிபொருள் நிலையம்)

அன்னை மடியில் 1917-11-05

ஆண்டவன் அடியில் 1990-07-18

திதி: 2000-08-10

அப்பா!

நீங்கள் உள்ளபோது! எமக்குஇல்லாதது ஒன்றுமில்லை.
நீங்கள் இல்லாத போது எமக்கு ஒன்றுமேயில்லை.

உங்கள் பிரிவால் துயருறும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

238, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (77169)

## நீங்காத நினைவின் 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 — 02 — 1956



உதிர்வு 10 — 08 — 1985

### திருமதி சுப்பிரமணியம் கமலாதேவி

(முன்னாள் ஆசிரியை, R.C. கோப்பாய் தெற்கு)

பாசத்தின் ஒளிவிளக்காய்
பாரினில் வந்துதித்து
நெஞ்சம் மகிழவைத்த உன்னை
பதினைந்து ஆண்டுகளாக
நினைவில் இருத்தி வைத்து வாழ்கின்றோம்.

கணவன்: வ. சுப்பிரமணியம்,
மகன்: சு. சுதர்சன்

கிறிஸ்தவக் கல்லூரி முன்பாக,
கோப்பாய் மத்தி. (77165)

## சுட்டெண் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 10

கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது சுட்டெண்களை இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் மருதனார்மடத்தில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

## நாளை

யாழ்ப்பாணம், ஒக. 10

யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தோர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்துக்கு 99/2000 ஆம் ஆண்டு மாணவர்களைச் சமுகம தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

★ ★ ★

வடமராட்சி, ஓக. 10

தொண்டமானாறு சந்நிதியான்ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்சித் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''திருமந்திரம்'' என்னும் தலைப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ. குமாரவேலின் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கான அறிமுகவுரையை அதே கல்லூரி விரிவுரையாளர் பொ. அருந்தவநாதன் நிகழ்த்துவார். (க-173-30)

## சமய சந்நிதிகளில்

வரலஷ்சுமி விரதம் நாளை வெள்ளிக்கிழமையாகும். இதனை ஒட்டி ஆலயங்களில் விசேட பூசைகள் இடம்பெறவுள்ளன.

★ தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் நண்பகல் ஒரு மணி முதல் பிற்பகல்!5 மணிவரை விஷேச பூசை அபிஷேகம் என்பன இடம்பெறவுள்ளன. பிற்பகல் 4 மணிக்கு காப்பு வழங்கல் நிகழ்வு இடம்பெறும்.

★ யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் காலை 8 மணிமுதல் மகாலஷ்சுமி தேவிக்கு விஷேசபூசைகள் இடம்பெறவுள்ளன. (க - 30)

## புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் வந்தன

எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள 5 ஆம் தரத்துக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் விமானம் மூலம் நேற்று முன்தினம் எடுத்துவரப்பட்டன.

அத்துடன் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜி.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சைக்கான இரண்டாவது தொகுதி வினாத் தாள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன என்று யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பன்னிரண்டு நாள்களுக்குரிய முதலாவது தொகுதி வினாத்தாள்கள் கடந்த மாதம் 27 ஆம் திகதி எடுத்து வரப்பட்டமை தெரிந்ததே. மிகுதி 9 நாள்களுக்குரிய வினாத்தாள்களே நேற்றுமுன் தினம்எடுத்து வரப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## மானிப்பாய்ப் பகுதியில் அடிக்கடி திருட்டுக்கள்

வலிகாமம் தெற்கு, ஓக. 10

மானிப்பாய்ப் பகுதியில் அடிக்கடி இரவு வேளைகளில் களவுகள் இடம் பெற்று வருகின்றன.

ஊரடங்கு அமுலில் உள்ள வேளையில் பிரதான வீதி ஓரங்களிலுள்ள கடைகளைத் துணிகரமாக உடைத்துக் களவுகள் நடைபெற்று வருகின்றன.

மானிப்பாய் — மருதனார் மடம் வீதியில் அமைந்துள்ள மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கக்கிளை ஒன்று கடந்த புதன்கிழமை உடைக்கப்பட்டு சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன.

சங்கத்தின் வாசலிலுள்ள சுருக்குக்கதவின் பிணைச்சலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் சங்கத்திலிருந்த சீனி, பால்மா வகைகள் மற்றும் சவர்க்காரம் போன்ற பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

மானிப்பாய் பொதுச் சந்தையின் உட்புறத்தே புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கடை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்ட அன்றிரவே உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டன.

பால்மா வகைகள், சீனி, அரிசி மற்றும் பாவனை பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக் கிழமை இரவு திருடப்பட்ட இக் கடைக்கு அருகில் உள்ள வர்த்தகர் ஒருவரின் கடையும் உடைக்கப்பட்டுத் திருட்டு நடைபெற்றுள்ளது. இந்த வர்த்தகர் நான்காவது தடவையாக தமது கடைப்பொருள்களை களவு கொடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

மானிப்பாய் பொதுச் சந்தையில் இரவுநேரக் காவலாளி இல்லாமையாலேயே திருடர்கள் தமது கைவரிசையை இலகுவாகக் காட்டிக் கொள்ள முடிவதாக வர்த்தகர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி களவுகள் சம்பந்தமாக சம்பந்தப்பட்டோரால் மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-152)

## சம்பளம் இல்லை

நெல்லியடி, ஓக. 10

பளை, பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிந்து தற்பொழுது வடமராட்சியில் தஞ்சமடைந்துள்ள 28 ஊழியர்களுக்கு கடந்த இருமாத காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தச் சங்கத்தின் கீழ் மருதங்கேணி, சோரன்பற்று, வண்ணாங்கேணி, ஆழிபவளை, முகமாலை, கிளாலி, ஆகிய பகுதிகளில் கள்ளுத்தவறணைகள் இயங்கி வந்துள்ளன

தற்பொழுது இராணுவ நடவடிக்கைகளினால் இந்தத் தவறணைகள் மூடப்பட்டிருப்பதனால் இங்கு பணிபுரிந்த ஊழியர்கள் கடந்த இரு மாதங்களாக சம்பளம் வழங்கப்படாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தற்பொழுது பளை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தற்காலிகமாக புலோலி கிராமக் கோட்டுச் சந்திக்கு அருகில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-109)

## தபாலகங்களைத் திருத்த 16 லட்சத்து 70 ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம், ஓக. 10

காரைநகர் மற்றும் மடுக்கோயில் தபால் நிலையங்களின் திருத்த வேலைகளுக்கென அஞ்சல் திணைக்களத்தினால் 16 லட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன என்று வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் ஏ. கே. சிவஞானசுந்தரம் தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் அஞ்சல் அலுவலகத்தின் கட்டடத்தொகுதி வேலைகளுக்கென 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

அத்துடன் இந்த ஆண்டு ஜனவரி மாதம் குண்டு வெடிப்பினால் சேதமடைந்த வவுனியா அஞ்சல் அலுவலகத்தின் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## கப்பலில் தபாற் பொதிகள்

யாழ்ப்பாணம், ஓக 10

நேற்றுப் பருத்தித்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 106 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன. இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 57 தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபால்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். பிரதம தபாலகம் தவிர்ந்தவேறு சில தபால் நிலையங்களுக்கு சாதாரண முத்திரைகளும் எடுத்துவரப்பட்டன கடந்த 2 ஆம் திகதி எடுத்துவரப்பட்ட சாதாரண முத்திரைகள் வட்டுக்கோட்டை, வல்வெட்டித்துறை, சுழிபுரம், மானிப்பாய், அளவெட்டி, பண்டத்தரிப்பு, அனலைதீவு ஆகிய தபால்நிலையங்களுக்கு வழங்கப்பட்டதாகவும் கூறினார். (இ-10)

# அமெரிக்கா இவ்வருடமும் 55 ஆயிரம் குடியேற்ற விசாக்களை வழங்கும்

அமெரிக்கா இவ்வருடமும் நிரந்தர குடியேற்ற அமெரிக்க விசாக்களை பிறநாட்டவருக்கு வழங்க உள்ளது. மொத்தம் 55,000 குடியேற்ற விசாக்களை அமெரிக்கா வழங்க உள்ளதாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

இந்தக் குடியேற்ற விசாக்கள் வழமைபோன்று கணனியினால் அதிர்ஷ்டலாபச் சீட்டு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படும். அமெரிக்காவுக்கு ஏற்கனவே குறைந்தளவில் குடியேறச் செல்பவர்களைக் கொண்ட நாடுகளுக்கு மேலதிக விசாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவிக்கின்றது.

*DV - 2002* என்ற பெயரிலான இந்த நிரந்தர குடியேற்ற விசாக்களுக்கு எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை என்றும் -

விண்ணப்பங்களை வெள்ளைத் தாளில் தட்டச்சுச் செய்யப்பட்டு அனுப்பி வைக்கலாம் என்றும் தூதரகம் மேலும் தெரிவித்தது.

விண்ணப்பதாரின் முழுப்பெயர், மனைவி, பிள்ளைகள் இருந்தால் அவர்களின் பெயர்கள், பிறந்த திகதியும், .பிறந்த இடமும், கடிதத் தொடர்பு கொள்வதற்கான விலாசம், தொலைபேசி இலக்கம், 1.5 அங்குலம் சதுரமான அண்மையில் எடுக்கப்பட்ட (6மாத காலத்துக்குள்) புகைப்படம் (புகைப்படத்தின் பின்னால் விண்ணப்பதாரியின் பெயர் குறிக்கப்படவேண்டும்) ஆகியவற்றுடன் விண்ணப்பதாரியின் வழமையான கையொப்பத்துடன் விண்ணப்பம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

கடந்த வருடங்களில் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்ட விலாசம் இப்பொழுது மாற்றப்பட்டுள்ளது. புதிய விலாசம் பின்வருமாறு:-

**DV - 2002 PROGRAM**
**KENTUCHY CONSULAR SECTION**
**LEXINGTON - FY - 41902**
**U.S.A.**

அமெரிக்க ராஜாங்க அமைச்சினால் விசா வழங்குவதற்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெளிநபர்கள் அல்லது வழக்கறிஞர்கள் அல்லது நிறுவனங்களின் உதவி இவ்விவகாரத்தில் தேவைப்படாது என்றும் இது தெரிவு செய்யப்படும் வாய்ப்பை அதிகரிக்காது என்றும் விண்ணப்பதாரர்கள் சுயமாகவே விண்ணப்பங்களைத் தபால் மூலம் அனுப்பிவைக்கலாம் என்றும் அமெரிக்கத் தூதரகம்தெரிவிக்கின்றது.

விண்ணப்பங்கள் சாதாரண (விமான/தரை) தபாலில் இவ்வருடம் ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதிக்கும் நவம்பர் முதலாம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்படி விலாசத்தைச் சென்றடையும் வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இத்திகதிகளுக்கு முன்பதாக அல்லது பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. சாதாரண (விமான/தரை மார்க்கமாக) தபால் தவிர்ந்த ஏனைய முறைகளில் அனுப்படும் விண்ணப்பங்கள் செல்லுபடியற்றதாகக் கருதப்படும்.

ஒருவர் ஒரு விண்ணப்பம் மட்டும் அனுப்பமுடியும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பினாலும் அவை செல்லுபடியற்றதாகிவிடும்.

சீனா, மக்காவு, இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தென்கொரியா, வியட்நாம் ஆகிய நாடுகளின் பிரஜைகள் அமெரிக்கக் குடியேற்ற விசாக்களுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியற்றவர்களாவர் என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது.

(இ-6)

# ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 750 பேரை நியமிப்பதற்கு உலக வங்கி அனுமதி

திருகோணமலை,ஓக.10

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 750 பேரை நியமிப்பதற்கான அனுமதியை உலகவங்கி வழங்கியுள்ளது.

மேற்கண்டவாறு மாகாணக் கல்வி அமைச்சுப் பணிப்பாளர் எஸ்.கமலநாதன் தெரிவித்தார்.

1998 ஆம் ஆண்டு இடம்பெற்ற நேர்முகப்பரீட்சையில் தோற்றிய பட்டதாரிகளில் இதுவரை எந்த வேலையும் கிடைக்காதவர்களில் 350 பேருக்கு இந்த நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

எஞ்சிய நானூறு வெற்றிடங்களுக்கு ஏனைய தரத்தில் உள்ளவர்களுக்கு நியமனம் வழங்கப்படவிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

(இ-3-150)

# மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு தளபாடவசதி

யாழ்ப்பாணம்,ஓக.10

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்துக்குத் தேவையான தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த அலுவலகத்துக்குத தேவையான தளபாடங்களை வழங்குமாறு யாழ்ப்பாண வலயக கல்விப் பணிப்பாளருக்கும் - வலிகாமம வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.சிவானந்தன் பணிப்புரை விடுத்துள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்குத் தளபாடம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரப்படவேண்டுமென்று இந்த அலுவலக உத்தியோகத்தர்கள் கடந்தமாதம் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

(க)

# பொ.ஐ.முன்னணி அரசு இந்த நாட்டை உலக வங்கிக்கு அடகு வைத்துவிட்டது

## ஜே.வி.பி. குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு,ஓக.10

இன்று எமதுநாடு தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய மூவின மக்களுக்கும் சொந்தம் அல்ல. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் இந்த நாட்டை வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் உலக வங்கிக்கும் அடகு வைத்துவிட்டது. இப்படி மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது :-

எமது நாட்டிலே தமிழ், சிங்கள முஸ்லிம் இனத்தவர்கள் வாழ்கின்றனர். அவர்கள் எவருக்குமே இந்த நாடு சொந்தம் இல்லை. வெளிநாட்டுக் கம்பனிகளுக்கும் உலக வங்கிக்குமே இந்த நாடு இன்று சொந்தமாக்கப்பட்டுள்ளது. அவர்கள் சொல்வதைக் கேட்டுத்தான் இந்த அரசாங்கம் நாட்டை வழி நடத்திச் செல்கிறது.

இந்த நாட்டில் இருக்கும் அத்தனை வளங்களும் வெளிநாடுகளுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டு விட்டன. எஞ்சி இருப்பவற்றை விற்பதற்கு இன்று அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது.

இன்று விலைவாசிகள் உயர்ந்து செல்கின்றன. மக்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்லமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். நாளுக்கு நாள் கொலை, கொள்ளைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. சட்டம், ஒழுங்கு என்பன சீர்கெட்டுள்ளன. இந்த நாடு அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அதிலிருந்து இந்த நாட்டைக் காக்க வேண்டுமெனில் தமிழ்,சிங்கள,முஸ்லிம் ஆகிய மூவினத்தவரும் எம்மோடு ஒன்று சேரவேண்டும்.

ஆயிரம் பிரஜைகளுக்கு ஆறு பேர் என்ற விகிதாசார அடிப்படையில் இன்று மக்கள் பிச்சை எடுக்கின்றனர். ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளில் 50 சதவீதத்துக்கு மேற்பட்டோர் மந்த போசனத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நாம் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளை எப்படி உருவாக்க முடியும்?

நாணயத்தின் பெறுமதி குறைக்கப்பட்டுள்ளது. இப்போது ஒரு ரூபாவின் உண்மையான பெறுமதி அறுபத்திரண்டு சதமாகும். அன்று 100 ரூபாவுக்கு வாங்கிய பொருள்களை இன்று வாங்க முடியாது.

இன்று நாம் பயன்படுத்தும் எல்லாப் பொருள்களுமே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் 42 அரச நிறுவனங்கள் விற்கப்பட்டன. இன்று இந்த அரசு 85 நிறுவனங்களை விற்பனைசெய்து சாதனை படைத்துள்ளது.

இன்று இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் 55 ஆயிரம் ரூபாவுக்கு கடனாளிகளாகவே உள்ளோம். பிறக்கும் குழந்தையைக்கூட இக்கடன் விட்டுவைக்கவில்லை. அந்தளவிற்கு நாம் உலக வங்கியிடமும் வெளிநாட்டு நிறுவனங்களிடமும் கடன் வாங்கி உள்ளோம். இந்த நாடு கடன்கார நாடாக மாறி வருகிறது.

இப்படி அவர் கூறினார். (இ-6)

# வவுனியா டிப்போவுக்கு ரூ.8 லட்சம் நஷ்டம்!

வவுனியா,ஓக.10

வவுனியாவில் கடந்த 21 ஆம் திகதி முதல் உள்ளூர் போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டுள்ளதை அடுத்து வவுனியா போக்குவரத்துச் சபைக்கு 8லட்சம்ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னர் வவுனியா நகரப்பகுதியில் இருந்து 12 இடங்களுக்கு உள்ளூர் சேவைகள் நடத்தப்படடன என்றும் -

இதனால் நாளொன்றுக்கு 40 ஆயிரம் ரூபா வருமானம் கிடைத்ததாகவும் தெரிவித்த மேற்படி அதிகாரி, தற்போது பஸ்சேவைகள் தடைப்பட்டுள்ளதை அடுத்து ஊழியர்களுக்கு இந்த மாதச் சம்பளத்தை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சொன்னார்.

இது குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் படை அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. சமீபத்தில் இடம்பெற்ற பஸ் எரிப்புச் சம்பவங்களை அடுத்து உள்ளூர் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

(இ-7-164)

## பொருள்களை எடுத்துச் செல்ல கட்டுப்பாடு

வவுனியா,ஓக.10

வவுனியாவில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குச் செல்லும் பொதுமக்கள் இனிமேல் 20கிலோவுக்கு உட்பட்ட பொருள்களையே தம்முடன் எடுத்துச்செல்ல முடியும் என வவுனியாப் படைத்தரப்பு நேற்று முன்தினம் அறிவித்தது.

வன்னிப்பகுதிக்குச் செல்லவென நேற்றுமுன்தினம் காலை நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வவுனியா செயலகத்தில் கூடியிருந்த சமயம் அங்கு வந்த படையினர் இந்த திடீர் அறிவிப்பை விடுத்தனர் என வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (இ-7-164)

## பொதுசன உதவிப்பணம்

வலி.கிழக்கு,ஓக.10

தென்மராட்சிப்பிரதேச செயலர் பிரிவில் இருந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மாதாந்த பொதுசன உதவிப்பணம் பெறுபவர்கள் எதிர் வரும் 15ஆம் திகதிக்குள் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல், மே, ஜூன் ஆகிய 3 மாதங்களுக்குரிய கொடுப்பனவுகளே தபாலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-180)

## அனுமதிக்கடிதம் உதயன் அலுவலகத்தில்

யாழ்ப்பாணம்,ஓக.10

மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரிக்கு அனுமதி பெற்றுள்ள மட்டுவில் தெற்கு, சிவன் கோவிலடியைச் சேர்ந்த வி.வசந்தநாயகி என்பவரின் அனுமதிக்கடிதம் உதயன் அலுவலகத்தில் உள்ளது.

சம்பந்தப்பட்டவர் அலுவலக நேரத்தில் சமுகம் தந்து அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளலாம். (இ-3)

# மக்கள் இடம்பெயர்ந்த இடங்களில் மிதிவெடி விழிப்புணர்வு நடவடிக்கை!

## ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.10

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் இடங்களில் கொத்தணி முறையில் மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஐ.நா. அபிவிருத்தித்திட்ட மிதிவெடி செயற்பாட்டுக்குழு ஈடுபட்டுவருகின்றது.

அண்மையில் ஏற்பட்ட இடம்பெயர்வுகளைத் தொடர்ந்து மாதகல், ஊறணி, வெட்டு, உரும்பிராய் உட்பட வலிகாமத்தின் பல பகுதிகளிலும் கைவிடப்பட்ட கட்டடங்களிலும் ஆள்கள் அற்ற வீடுகளிலும் மக்கள் குடியமர்ந்து வருகின்றனர்.

இவ்வாறு குடியமரும் மக்கள் தமது இருப்பிடங்களுக்கு அருகில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர்.

இந்த மக்களின் நன்மை கருதி அவர்கள் மத்தியில் மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை தாம் நடத்தி வருவதாக ஐநா அபிவிருத்தித்திட்ட மிதிவெடி செயற்பாட்டுக் குழுவின் இணைப்பாளர் எல்மோ ஆனந்தராஜா தெரிவித்தார்.

மக்கள் குடியமரும் இடங்களில் - மிதிவெடிகள் இருக்கக்கூடிய பகுதிகளில் - எச்சரிக்கை அறிவித்தல்களைப் போட்டுவருவதுடன் அந்தப் பகுதிகளையும் அடையாளப்படுத்தி வருகிறோம் என்றும் அவர் கூறினார்.

கடந்த சில நாள்களாக மிதிவெடியினால் காயமடைந்து வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது பற்றி கவலை தெரிவித்த அவர் எமது குழுவைப் பொறுத்தவரையில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளை மட்டுமே நிறுத்தி வைத்திருக்கிறோம். ஆனால் மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம் - என்றார்.

(இ-5)


**எழுதுநர் நியமனத்தில் பாதிக்கப்பட்டோர்**

***ஒன்றுகூடல்***

இன்று காலை 9.30 மணிக்கு (பு.நே) வடக்கு - கிழக்கு மாகாண எழுதுநர் நியமனத்தில் பாதிக்கப்பட்டவர்கள் யாழ். அரசாங்க அதிபரைச் சந்திக்க இருப்பதனால் பாதிக்கப்பட்ட அனைவரும் செயலக துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்தில் ஒன்றுகூடுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
பாதிக்கப்பட்டோர் அமைப்பு

(77161)



**பாராயணம்**

சிவலோக பிராப்தி அடைந்த
சிவாச்சார்யர்
**சிவஸ்ரீ.கா.கைலாசநாதக்குருக்கள்**
அவர்கட்கு அஞ்சலி செலுத்துமுகமாக
இணுவில்காயத்ரீ பீடத்தில் மூன்று நாள்கள்
'பிருகுவல்லி' உபநிஷத் பாராயணம் செய்யப்பட்டது.

சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்களும்,
தர்மசாஸ்தா குருகுல மாணவர்களும்.

(77156)



**கண்ணீர் அஞ்சலி**

ஆங்கில நெறி இரண்டாம் வருடத்தைச்சேர்ந்த
திரு. சிறீராஜகுமாரின அன்புத்தாயார்
**திருமதி க. தவமணி**
அவர்களின் மறைவரல் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர் மன்றம்,
*பலாலி ஆசிரியகலாசாலை.*

(77157)

# வெளிநாடு சென்ற எம்.பிமார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குக!

## அமைச்சர் திஸநாயக்க கோரிக்கை

கொழும்பு,ஓக.10

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகல் மீதான விவாதங்களில் கலந்து கொள்ளாமல் வெளிநாடு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா இவ்வாறான கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற பொது வைபவம் ஒன்றில கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடரும் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில் அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட எம். பிக்களே மக்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் முக்கிய சந்தர்ப்பத்தில் வெளிநாடு சென்றுவிட்டனர்.

எனவே இத்தகைய உறுப்பினர்களின் நடவடிக்கை குறித்து உரிய முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காமல் விட்டாலும்கூட புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளும் ஆணையை மக்கள் ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகல் மீதான விவாதங்கள் நாடாளுமன்றத்தில் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் நடைபெற்றபோது ஐ.தே.க. கட்சியின் தலைமைப் பீடம் தனது கட்சி எம். பிக்கள் சிலரை விவாதங்களில் பங்குபற்ற விடாது சிங்கப்பூருக்கு அனுப்பிவிட்டதாக அரசுத் தரப்பு குற்றம் சாட்டியிருந்தமை தெரிந்ததே. (ஐ-7)

# தமிழரின் அபிலாஷைகளை ஓரளவே பூர்த்தி செய்கிறது

## சட்டநகல் குறித்து ஈ.பி.டி.பி. பிரமுகர்

கொழும்பு,ஓக.10

"புதிய அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகல் தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஓரளவே பூர்த்தி செய்வதாக' உள்ளது.

ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராசா இவ்வாறு கூறினார்.

கடந்த திங்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற புதிய அரசமைப்புச் சட்டநகல் மீதான விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

இந்த நகலில் நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பல்வேறு அம்சங்கள் இருந்த போதிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டிய குறைகள் பற்றி குழுநிலை விவாதத்தின் போது சுட்டிக்காட்டப்படும். அத்துடன் இச்சட்ட நகல் தமிழ் மக்களின் உரிமைகள் மீது கவனம் செலுத்துகின்றது.

1970இல் வடபகுதியில் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்து அது வலுவடைந்து வடக்கு - கிழக்குப் பகுதிகள் முழுவதுமே விரிவடைந்தது. தமிழ் மக்களின் உரிமைகளைத் தருவதாகக் கூறி பல ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை நிறைவேற்றப்படவில்லை. அதன் தாக்கமாக தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் தீவிரமானது.

ஈ.பி.டி.பியும் அந்த ஆயுதப் போராட்டத்தில் அப்போது ஈடுபட்டது. டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நாம அதில் இணைந்தோம். பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் எம்மால இணைந்துகொள்ள முடிந்தது.

இதுவரை தமிழ்மொழி அமுலாக்கம் என்பது பெயரளவிலேயே உள்ளது. பொலீஸ் அதிகாரங்கள் மத்திய அரசிடமே உள்ளன. எந்தவொரு மாகாண சபைக்கும் பொலீஸ் அதிகாரம் வழங்கப்படவில்லை. கடந்த 14 வருடங்களாக நாம் எமது உரிமைகளைப் பேணுவதற்கு தொடர்ந்தும போராட வேண்டியுள்ளது. புதிய அரசமைப்புச் சட்டத்தில் சில முக்கிய விடயங்கள் இடம்பெறவில்லை. தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய முறையில் இத்திருத்தங்கள் முன்வைக்கப்பட வேண்டும் - என்றார்.

### அமைச்சர் அஷ்ரப்

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் தனது உரையில் கூறியதாவது:-

புதிய அரசமைப்புச் சீர்திருத்தங்களை அரசாங்கம் தாமதப்படுத்தி வருகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் கடந்த பெப்ரவரி மாதம் கண்டித்தார். ஆனால் இப்போது இந்த அரசமைப்பை அரசு நாடாளுமன்றத்துக்கு அவசர அவசரமாக கொண்டு வருகின்றது என்று குறிப்பிடுகின்றார். எதிர்க்கட்சித் தலைவரின் இந்த நிலைப்பாட்டின் பின்னணி என்ன? கட்சி வேறுபாடுகளை மறந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஆதரவு அளிக்கப் போவதாக ரணில் அப்போது குறிப்பிட்டிருந்தார். இப்போது அவர் வேறு விதமாக பேசுகின்றார்.

சட்டமூலம் சம்பந்தமான விவாதத்தில் கலந்து கொண்டு அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஐ.தே.கட்சிக்கு உண்டு.

ஐ.தே.கட்சி 13ஆவது திருத்தத்தை இரகசியமாகக் கொண்டு வந்தது. ஆனால் அரசாங்கம் அப்படிச் செய்யாது பகிரங்கமாக நடந்து கொண்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கூறுகின்ற ஐ.தே.கட்சிதான் அதனை அறிமுகப்படுத்தியது.

வரலாற்றில் முதற்தடவையாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அரசாங்கத்தின் தலைவர் ஒருவர் நேர்மையாகவும் விசுவாசத்துடனும் இச்சட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார் - என்று அஷ்ரப் கூறினார். (ஐ-க-4)

## பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.10

யாழ். அரசடிப் பகுதியில் கடந்த, 4ஆம் திகதி இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவத்தில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் நேற்று முன்தினம் யாழ்.பொலீஸாரால் கைது செய்யப்பட்ட - அரசடியைச் சேர்ந்த - பிள்ளையார் யோகேஸ்வரன் என்பவரை 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் அனுமதித்தது.

பிரஸ்தாப சந்தேகநபர் மீதான வழக்கு எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை -

இந்தக் கோஷ்டி மோதல் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என்று சந்தேகத்தில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட ஐந்து பேர் பிணையில் செல்ல் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் ஒரு பெண் உட்பட 6 பேர் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டமை தெரிந்ததே. (ஐ-9)

## அவசரகாலச்சட்டம் நிறைவேறியது

அவசரகாலச்சட்டத்தை நாடு முழுவதும் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை 114 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேறியது.

124 பேர் பிரேரணைக்கு ஆதரவாகவும் 7 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர்.

ஈ.பி.டி.பி.,இ.தொ.க.மற்றும் ஐ.தே.கட்சியின் மாற்றுக்குழு உறுப்பினர்கள் பிரேரணைக்கு, ஆதரவாகவும் - தமிழர் விடுதலைக் கூட்டணி,ரெலோ மற்றும் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் பிரேரணைக்கு எதிராகவும் வாக்களித்தனர்.

ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இதேவேளை-

பாதுகாப்புத் துறைக்கான குறை நிரப்புப்பிரேரணையும் நாடாளுமன்றத்தில் நேற்று 5 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இதன்படி 2 ஆயிரத்து 800 கோடி ரூபா பாதுகாப்புச் செலவீனங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## தாச்சிப் போட்டி

யாழ். பல்கலைக்கழகத்துக்கும் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ தாச்சிப் போட்டி இன்று பிற்பகல் 4-30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி வி.க. மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

## வங்கித் தலைமையகத்துடன் தொடர்பு கொள்க!

யாழ்ப்பாணம்,ஓக.10

கடந்த வாரம் மக்கள் வங்கியின் யாழ்.பிராந்தியத் தலைமையகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டவர்கள், தமது நியமனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக விரைவில் கொழும்பு செல்ல வேண்டியுள்ளதால் தத்தமது பகுதி சிவில் நிர்வாக அலுவலகங்களில் கப்பல் பயணத்துக்கான விண்ணப்பப் படிவங்களைச்சமர்ப்பிப்பதுடன் மக்கள் வங்கியின் வடபிராந்திய தலைமையகத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு மக்கள் வங்கியின் வடவலய உதவி பொது முகாமையாளர் க.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார். (ஐ-10)

## ஐந்தாம் தர மாணவருக்கு

ஓகஸ்ட் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஐந்தாம்தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான சுட்டெண் பெற்றுக்கொள்ளாத தென்மராட்சிக் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் மாணவர்கள் வடமராட்சிப் பகுதியில் பரீட்சை நிலையங்களாக அறிவிக்கப்பட்ட இடங்களுக்கு அன்று காலை 9 மணிக்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார் (ஐ-117)

★ ★ ★

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மீசாலை கமலாம்பிகை வித்தியாலய மாணவர்கள் தமது சுட்டெண்களை எதிர்வரும் 13ஆம் திகதி காலை 8 மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் பெற்று அன்று நடைபெறும் பரீட்சையில் தோற்றுமாறு அதிபர் ந. தியாகராசா அறிவித்துள்ளார். (ஐ)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஓக.10

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 9ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 513/138412/A | 513/150344/A |
| 513/150344/B | 513/150344/C |
| 513/150401/A | 513/150401/B |
| 513/150447/A | 513/150447/B |
| 513/150484/A | 513/150485/A |
| 513/150528/A | 513/150528/B |
| 513/150616/A | 513/150626/A |
| 513/150626/B | 513/150626/C |
| 513/150626/D | 513/150709/A |
| 513/150709/B | 513/150771/A |
| 513/150772/A | 513/150772/B |
| 513/150772/C | 513/151774/A |
| 513/151800/A | 513/151800/B |
| 513/151807/A | 513/151807/B |
| 513/151847/A | 513/151856/A |
| 513/151858/A | 513/151858/B |
| 513/151859/A | 513/151868/A |
| 513/151868/B | 513/151870/A |
| 513/151894/A | 513/151894/B |
| 513/151929/A | 513/153423/A |
| 513/153423/B | |

### நல்லூர்

| | |
|---|---|
| 513/129240/A | 513/135718/A |
| 513/143822/A | 513/143822/B |
| 513/143822/C | 513/150325/A |
| 513/150335/A | 513/150335/B |
| 513/150335/C | 513/150335/D |
| 513/150437/A | 513/150437/B |
| 513/150439/A | 513/150439/B |
| 513/150439/C | 513/150452/A |
| 513/150461/A | 513/150488/A |
| 513/150488/B | 513/150488/C |
| 513/150500/A | 513/150500/B |
| 513/150500/C | 513/150519/A |
| 513/150519/B | 513/150519/C |
| 513/150536/A | 513/150536/B |
| 513/150611/A | 513/150612/A |
| 513/150651/A | 513/150654/A |
| 513/150654/B | 513/150746/A |
| 513/150761/A | 513/150806/A |
| 513/150806/B | 513/151788/A |
| 513/151788/B | 513/151826/A |
| 513/151826/B | 513/151857/A |
| 513/151857/B | 513/151862/A |
| 513/151890/A | 513/151890/B |
| 513/151896/A | 513/151896/B |
| 513/151898/A | 513/151898/B |
| 513/151898/C | 513/151966/A |
| 513/151971/A | 513/151971/B |
| 513/151977/A | 513/151977/B |
| 513/152007/A | 513/152008/A |
| 513/152008/B | 513/152008/C |
| 513/152023/A | 513/152023/B |
| 513/152023/C | 513/152023/D |
| 513/152023/E | 513/152023/F |
| 513/152122/A | 513/152566/A |
| 513/152566/B | 513/152566/C |
| 513/153307/A | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/143771/A | 513/143771/B |
| 513/143771/C | 513/144188/A |
| 513/146399/A | 513/147405/A |
| 513/150363/A | 513/150363/B |
| 513/150363/C | 513/150363/D |
| 513/150385/A | 513/150391/A |
| 513/150391/B | 513/150413/A |
| 513/150413/B | 513/150449/A |
| 513/150451/A | 513/150451/B |
| 513/150451/C | 513/150459/A |
| 513/150459/B | 513/150459/C |
| 513/150459/D | 513/150466/A |
| 513/150551/A | 513/150551/B |
| 513/150557/A | 513/150558/A |
| 513/150558/B | 513/150562/A |
| 513/150562/B | 513/150562/C |
| 513/150575/A | 513/150575/B |
| 513/150590/A | 513/150590/B |
| 513/150590/C | 513/150590/D |

| | |
|---|---|
| 513/150592/A | 513/150627/A |
| 513/150627/B | 513/150627/C |
| 513/150627/D | 513/150627/E |
| 513/150630/A | 513/150630/B |
| 513/150639/A | 513/150639/B |
| 513/150666/A | 513/150667/A |
| 513/150691/A | 513/150713/A |
| 513/150713/B | 513/150713/C |
| 513/150714/A | 513/150714/B |
| 513/150714/C | 513/150717/A |
| 513/150775/A | 513/150775/B |
| 513/150775/C | 513/150791/A |
| 513/150798/A | 513/150798/B |
| 513/150804/A | 513/151768/A |
| 513/151770/A | 513/151777/A |
| 513/151791/A | 513/151799/A |
| 513/151825/A | 513/151865/A |
| 513/151865/B | 513/151874/A |
| 513/151874/B | 513/151874/C |
| 513/151938/A | 513/151938/B |
| 513/151957/A | 513/152006/A |
| 513/152006/B | 513/152056/A |
| 513/152069/A | 513/152069/B |
| 513/152069/C | 513/153237/A |
| 513/153352/A | 513/153352/B |
| 513/153352/C | 513/153352/D |
| 513/153352/E | 513/153472/A |
| 513/153472/B | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/141869/A | 513/141869/B |
| 513/141869/C | 513/141869/D |
| 513/143813/A | 513/143813/B |
| 513/146276/A | 513/146276/B |
| 513/150701/A | 513/150701/B |
| 513/151806/A | 513/151844/A |
| 513/151968/A | 513/153247/A |
| 513/153247/B | 513/153247/C |
| 513/131649/A | 513/131649/B |
| 513/131649/C | 513/141852/A |
| 513/141852/B | 513/143968/A |
| 513/143968/B | 513/143968/C |
| 513/146318/A | 513/146438/A |
| 513/146438/B | 513/146438/C |
| 513/146438/D | 513/150400/A |
| 513/150400/B | 513/150400/C |
| 513/150400/D | 513/150524/A |
| 513/150524/B | 513/150601/A |
| 513/150601/B | 513/150633/A |
| 513/150638/A | 513/150646/A |
| 513/150646/B | 513/150647/A |
| 513/150656/A | 513/150656/B |
| 513/150656/C | 513/150656/D |
| 513/150661/A | 513/150661/B |
| 513/150661/C | 513/150661/D |
| 513/150661/E | 513/150661/F |
| 513/150663/A | 513/150685/A |
| 513/150686/A | 513/150686/B |
| 513/150690/A | 513/150711/A |
| 513/150719/A | 513/150719/B |
| 513/150719/C | 513/150719/D |
| 513/150719/E | 513/150719/F |
| 513/150763/A | 513/150763/B |
| 513/150766/A | 513/150766/B |
| 513/150769/A | 513/151010/A |
| 513/151010/B | 513/151010/C |
| 513/151758/A | 513/151760/A |
| 513/151760/B | 513/151767/A |
| 513/151767/B | 513/151817/A |
| 513/151875/A | 513/151876/A |
| 513/151880/A | 513/151881/A |
| 513/151889/A | 513/151889/B |
| 513/151889/C | 513/151889/D |
| 513/151933/A | 513/151933/B |
| 513/151935/A | 513/151935/B |
| 513/151942/A | 513/151942/B |
| 513/151942/C | 513/151970/A |
| 513/151975/A | 513/151988/A |
| 513/151988/B | 513/152009/A |
| 513/152015/A | 513/152015/B |
| 513/152020/A | 513/152020/B |
| 513/152104/A | 513/152877/A |
| 513/153254/A | 513/153254/B |
| 513/153293/A | 513/153327/A |
| 513/153350/A | 513/153350/B |
| 513/153391/A | 513/153393/A |
| 513/153393/B | 513/153393/C |
| 513/153468/A | 513/153468/B |
| 513/153489/A | 513/153496/A |


## கண்ணீர் அஞ்சலி

07-08-2000 அன்று ஆஸ்திரேலியாவில்
இறைபதமடைந்த மதிப்புக்குரிய பேராசிரியர்
**பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள்**
அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**தி.கணேசசர்மா குடும்பத்தினர்.**
முன்னாள் சிவன் கோயில் தற்காலிக அர்ச்சகர்.

*23,விதானையார் வீதி,*
*கொழும்புத்துறை.*

(77173)

# கப்பல் சேவையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வாரமளவில் அம்முயற்சி வெற்றிபெறும் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

இதற்கிடையில் -

நேற்றுப் பிற்பகல் திருகோணமலையில் இருந்து புறப்பட்ட இக்கப்பலில் பயணம் செய்யப் போதிய பயணிகள் இருக்கவில்லை என்றும் -

நானூறுக்கும் குறையாதோர் பயணம் செய்யக்கூடிய இக்கப்பலில் நேற்று ஆக 270 பேரே பயணம் புறப்பட்டதாகவும்-

கப்பலின் பயண முகவர்களான எம்.எல்.எஸ். ரேடிங் நிறுவனத் தலைவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இக்கப்பலில் இன்று இங்கிருந்து பயணம் செய்வதற்கு இன்னும் ஒரு தொகுதியினருக்கு இடமிருப்பதாகவும் -

ஏ,பி,ஸி பட்டியல்கள் மூலம் பயண அனுமதி பெற்றோர் இன்று காலை 8 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்குச் சமுகம் தந்து பயணச் சீட்டுக்களைப் பெற்றுப் பயணம் செய்யமுடியும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

டி,ஈ பட்டியல்களில் பயண அனுமதி பெற்றோருக்கு இன்றும்-

எவ்,ஜி பட்டியல்களில் பயண அனுமதி பெற்றோருக்கு நாளையும்-

யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள தமது அலுவலகத்தில் காலை 8.30 மணி முதல் பயணச் சீட்டுகள் வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

இப்பயணிகள் அடுத்து வரும் வாராந்த சேவைகளில் ஏதேனும் ஒன்றில் பயணம் செய்வதற்குரிய பயணச் சீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

இன்று புறப்படும் கப்பலில் பயணம்செய்ய பயணச்சீட்டுப் பெற்றுக் கொண்டோர் இன்று காலையில் பயண ஏற்பாடுகளுடன் சிவில் நிர்வாக அலுவலகத்துக்குச் சமுகம் தரவேண்டும் என்றும் -

காலை 8.30 மணிமுதல் நண்பகல் 11.30 மணிவரை தொகுதி தொகுதியாகப் பயணிகள் பருத்தித்துறைக்கு பஸ்ஸில் அனுப்பி வைக்கப்படுவர் என்றும் -

யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ)

## சித்தாண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து சித்தாண்டி ஊடான போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

காயமடைந்த சிப்பாய்கள் இருவரும் பொலநறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய குடும்பஸ்தர்களான தியாகராஜா ஞானராஜா(வயது25),அருளம்பலம் சந்திரமோகன் (வயது24) ஆகியோர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் அ.சந்திரசேகரன் என்பவரின் தலை துண்டிக்கப்பட்டிருந்ததாக செய்திகள் தெரிவித்தன. (ஐ-7-21)

## நாடாளுமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வற்றில் உயர் பதவி வகிப்போர் ஆகியோரின் நியமனங்களை உறுதிப்படுத்தும் நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் நாளை நடைபெறவிருக்கின்றது.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறிலால் வீரசூரியாவை பாகிஸ்தானுக்கான தூதுவராக நியமிப்பது உட்பட ஐந்து வெளிநாட்டுத் தூதர்களின் நியமனங்களை இந்த நாடாளுமன்றக் குழு அங்கீகரிக்க வேண்டியுள்ளது.

இந்தக் குழுவின் கூட்டம் நாளை முடிவடைந்ததும் -

அனேகமாக நாளை நள்ளிரவு - தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுப் புதிய தேர்தல்களுக்கான அறிவிப்பு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் அடுத்த தேர்தலுக்கான ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டதாக அத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக்கப்பட்டதாகவும்-

விமான எதிர்ப்பு ஆயுதங்களைக் கொண்டு புலிகள் பதில் தாக்குதலைத் தீவிரமாக மேற்கொண்டதாகவும்-

மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-4)


பாதிக்கப்பட்ட மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

A/L 2001

ஒப்படைக் க/கு

ஆரம்பம் :-12.08.00

மாலை 4மணி (சனி, ஞாயிறு)

கணக்கீடு :-D.SAM

பிரத்தியேக வகுப்பு

76.:.2 கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- வரையறுக்கப்பட்ட அனுமதிகள் மட்டும் வழங்கப்படும். (C/12441)



D.C.M.

DEGREE COLLEGE OF COMMERCE AND MANAGEMENT STUDIES

நாவலர்வீதி, யாழ்ப்பாணம்
(பொருளியல் கல்லூரியில்)

யாழ்.பல்கலைக்கழக
G.A.Q. 1ST in Com - வெளிவாரித் தேர்வு 2000

பொருளியல் கருத்தரங்கு
S.வரதராஜன் B.A. (Hons)

இம்மாதம்
21,22,23ஆம் திகதிகளில் 8.30 - 3.00
மணி வரை நடைபெறும்

குறிப்பு:- கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் 15.08.2000க்குப் பின்பாக பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவும். இம்மாணவர்களுக்கு மட்டுமே வினா விடைப் புத்தகங்கள் வழங்கப்படும். (77131)



எமது புதிய வீடியோ CD வெளியீடு

அபிமான நட்சத்திரங்களின் நடிப்பில்

அம்மன் கோயில் குழந்தை

வீடியோ விமல்

யாழ்பாணம். (C/12451)



NEW SCIENCE COLLEGE

வெங்கடேசன் வீதி
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

A/L 2001

PAPER CLASS

BASIC CHEMISTRY

திரு. மகேஸ்வரன் B.Sc.

ஆரம்பம் 10.-8.2000 இன்று


Thu. 3.00p.m

Mon.,Fri. - 3.00 - 4.00

(77158)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பூவடி
09
-
08
-
1912



திருவடி
11
-
07
-
2000

## அமரர் திருவம்பலம் சிவமயம்

(சித்தன்கேணி)

எங்கள் குடும்ப இல்லத்தலைவர் இணையிலா அன்பின் இருப்பிடமான அமரத்துவம் பெற்ற திருவம்பலம் சிவமயம் அவர்களின் இறுதிச் சடங்கில் பங்குபற்றியோர்களுக்கும், அனுதாபச் செய்திகள், கடிதங்கள், தந்திகள், தொலைபன்னிகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் சகலவழிகளிலும் ஆதரவு நல்கிய அன்புள்ளங்களுக்கும் இரங்கலுரை ஆற்றிய இனிய அன்பர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்ட சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினருக்கும், ACF நிறுவனத்தினருக்கும், வலிகாமம் மேற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும், கணேசவித்தியாலயம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளை காணிக்கையாக்குவதுடன்

அன்னாரின் இல்லத்தில் இன்று (10.08.2000) வியாழக்கிழமை 10 மணியளவில் நடைபெறும் அவரது ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனை நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவினால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

"ராம்ராஜ்"
சித்தன்கேணி.

(77146) திருமதி இராமஜெயம் (மைத்துனி)


கப்பல் பயணச் சீட்டு விநியோகம்

எம்.எல்.எஸ். ரேடிங் கம்பனி

அறிவித்தல்

பருத்தித்துறை - திருகோணமலை பயணிகள் கப்பலில் ("சிற்றி ஒவ் றிங்கோ"வில்) இன்று பருத்தித்துறையில் இருந்து புறப்படும். சேவையில் பயணம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைப் பயணிகளுக்கு இடமுண்டு. யாழ். சிவில் நிர்வாக அலுவல்கத்தில் A,B,C பட்டியல்களில் அனுமதிபெற்றோர் உரிய பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 8.30 மணிக்கு. யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வந்து எமது நிறுவனப் பிரதிநிதிகளிடம் பணயச் சீட்டைப் பெற்று உடன் பயணம் செய்ய முடியும்.

★ D,E பட்டியல்களில் அனுமதி பெற்றோர் எதிர்வரும் 15 ஆம் திகதி புறப்படும் அடுத்த கப்பல் சேவையிலோ அல்லது அதற்குப் பின்னர் வரும் சேவைகளில் தாம் விரும்பிய ஏதேனும் ஒன்றிலோ பயணம் செய்யவதற்கான பயணச் சீட்டுக்களை இன்று எமது ஸ்ரான்லி வீதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

★ F,G பட்டியல்களில் அனுமதி பெற்றோருக்கான பயணச் சீட்டுகள் நாளை எமது அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படும்.

★ பருத்தித்துறைப் பகுதி மக்களுக்கான பயணச் சீட்டு விநியோகம் நாளை முதல் அங்குள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து மேற்கொள்ளப்படும்.

எம்.எல்.எஸ். ரேடிங் கம்பனி

79,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/12452)


# மரண அறிவித்தல்

## ஞானசுந்தரம் சிவசுந்தரம் (பேபி)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானசுந்தரம் சிவசுந்தரம் (பேபி) இன்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி ஞானசுந்தரம் - ஞானசுந்தரம் மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும் ஸ்ரீமனோகரன் (கொழும்பு), செல்வசுந்தரம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), ஜெயசுந்தரம் (கண்டி), பாலசுந்தரம் (ஜேர்மனி), பிறேமரதி, மோகனசுந்தரம் (யாழ்.மாநகரசபை), ரவிசுந்தரம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), யோகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவமலர், செல்வமணி, பத்மினி, ஸ்ரீபாலா (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்), கலாவதி, வாசினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப.2.30 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஞானசுந்தரம் மகேஸ்வரி
(தாய்)

441,கே.கே.எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.

(C/12453)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.